Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/752)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 28 சனிக்கிழமை. (11.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 255



வலைப்பந்தாட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் சம்பியன் 06



போலியான தேசப்பற்று ஜே.வி.பி. குற்றச்சாட்டு 08



அபூர்வ சகோதரிகள் 11



ஹுசைனின் இறுதிச் சடங்கு இந்தியாவில் 12

# வலிகாமம் வடக்கில் மீள் எழுச்சித் திட்டம்

(கட்டுவன்)

துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பன்னாலை, களைகட்டாவத்தை ஆகிய கிராமங்களில் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பான பகுப்பாய்வு வேலைகள் முடிவுற்று கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக இத்திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் குறித்த கிராம அலுவலர் பிரிவில் 204 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், குலமங்கால் கிராமத்தின் 4 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொது நோக்கு மண்டபமும் முன்பள்ளிக் கட்டவேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதனைவிட இத்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு இளவாலை வடக்கு, வித்தகபுரம், தெல்லிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைப்பு

இலங்கை தேர்தல் திணைக்களத்தினால் மீண்டும் வடக்கில் இரண்டு உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய சபைகளின் தேர்தல்களே ஒத்திவைக்கப்பட்டன.

இப்பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமையே இந்த ஒத்திவைப்புக்கான காரணம் என்று இலங்கை தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வடக்கு பாடசாலைகள் தீவிர கண்காணிப்பில்

(அச்சுவேலி)

வடமாகாண கல்வி அமைச்சின் பாடசாலைக்கான மேற்பார்வைக் குழுவின் கண்காணிப்பு நடவடிக்கைகள் குடாநாட்டில் முடுக்கி விடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலைகளுக்கு மேற்பார்வை நடவடிக்கைகளுக்காகத் தரிசிப்பினை மேற்கொண்டு வரும் இவ்மேற்பார்வைக் குழு பாடசாலைகளில் நிர்வாக நடவடிக்கைகள், நேரசூசிகள், கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள், பாடத்திட்ட வருடாந்த அமுலாக்கல் திட்டம், மாணவர் செயற்பாடுகள், வகுப்பறைச் செயற்பாடுகள் எனப் பல்வேறு விடயங்களைக் கண்காணித்துக் கொள்வதுடன், தமது தரிசிப்புத் தொடர்பான கருத்துக்களை தெரிவிப்பதுடன், அது பற்றிய அறிக்கைகளையும் மகாணக் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பித்து வருகின்றனர். (03)



# நோர்வேயுடன் மீண்டும் உறவு



(கொழும்பு)

நோர்வேயுடன் மீண்டும் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அரசு புதிய இராஜதந்திர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிறப்புத் தூதுவர் ஒருவர் மிக விரைவில் ஒஸ்லோவுக்குச் செல்லவுள்ளார்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட அழுத்தங்களையும், அபகீர்த்தியையும் அகற்றும் மற்றுமொரு முயற்சியாகவே அரசு மேற்படி இராஜதந்திர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்த பின்னர் நாட்டில் ஏற்பட்டிருக்கும் புதிய மாற்றங்கள் குறித்து நோர்வே அரசுக்கு விலாவாரியாக எடுத்த விளக்கப்படவிருக்கிறது. மேற்படி இராஜதந்திர நடவடிக்கைக்கான சிறப்புத் (16ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய உயர்மட்டக் குழுவுடன் கூட்டமைப்பு இன்று பேச்சு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய உயர்மட்டக் குழுவை இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கவுள்ளதாக அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது ஐ.நா அறிக்கை, அரசியல் தீர்வு, மீள் குடியேற்றம் மற்றும் யுத்தத்துக்கு பின்னரான நிலை குறித்து கலந்துரையாடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## வன்னியில் கள்ள நோட்டு தயாரித்த இருவர் கைது

(கிளிநொச்சி)

வன்னியில் போலி நாணயத் தாள்களைத் தயாரித்து புளக்கத்துக்கு விட்ட கும்பல் ஒன்று பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

கள்ள நோட்டு அச்சடித்த இக்கும்பலைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# தீ விபத்தில் குடும்பஸ்தர் பலி; வவுனியாவில் நடந்த துயரம்

வவுனியா சுந்தரபுரம் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற தீ விபத்தில் குடும்பஸ்தர் பன்னீர்ச்செல்வம் (வயது-40) எரியுண்டு மரணமாகியுள்ளார். மின்சாரம் தடைப்பட்ட வேளையில் குப்பி விளக் கினைப் பற்ற வைத்தபோது தவறி வீழ்ந்ததினால் அருகாமையில் இருந்த பெற்றோல் தாங்கி தீப் பிடித்து வெடித்ததினால் குடிசை வீட்டுடன் எரியுண்டு அவர் மரணமாகியுள்ளார். இவர் எரிபொருள்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் என்பது பொலிஸாரின் விசாரணையின் போது தெரியவந்து. (39)

# இந்திய மீனவர்கள் விவகாரம் சுமூகத்தீர்வு காணலாம்

## சமாசத் தலைவர் தவரட்ணம் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

நாம் ஒருபோதும் வன் முறையை நாடப் போவதில்லை, வன்முறையை ஏற்பதுமில்லை. இதுவரை வன்முறைகளால் சாதித்தது எதுவுமில்லை. வன்முறைகளால் இதுவரை கண்டவை போதும். எமது கடல் வளங்கள் இந்திய மீனவர்களினால் சுரண்டப்படுவது தொடர்பாக நாம் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசிவருகிறோம்.

ஆனால், பத்திரிகை ஒன்றில் கூறியது போல் வன்முறையான வழியிலோ ஆர்ப்பாட்டங்களிலோ ஈடுபடப் போவதில்லை.

நேற்றைய தினம் இந்திய மீனவர்களின் வருகையைத் கண்டித்து யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் (15ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் இந்திய இராணுவ அதிகாரிகள் யுத்த வியூகங்கள் பற்றி அறிவதில் ஆர்வம்

(கொழும்பு)

இந்திய இராணுவ அதி காரிகள் குழு ஒன்று வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்து கள நிலவரங்களை அறிந்து சென்றுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற பகுதிகளுக்குச் சென்ற மேற்படி இந்திய இராணுவ அதிகாரிகள் குழுவினர் புலிகளுடனான இறுதி யுத்தம் இடம்பெற்ற கள நிலைகளை அவ்தா னித்தனர். இருதரப்பின் யுத்த வியூகங்களையும் படை அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தலைமையிலான குழுவினரே இவ்வாறு வன்னிப் பகுதிக்கான விஜயமொன்றை மேற்கொண்டனர். கொழும்பில் நடத்தப்பட்ட போர்க கருத்தரங்கில் பங்கேற்க இலங்கை வந்திருந்த மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தலைமையிலான புதுடில்லி பாதுகாப்புக்குழுவின் உறுப்பினர்களே வன்னிப் பகுதியின் களநிலை ஆய்வுகளை மேற் (15ஆம் பக்கம் பார்க்க)



# வீடமைப்புக்கு நோர்வே உதவி

(கொழும்பு)

நோர்வே அரசு ‘சீட’ நிறுவனத்தின் ஊடாகக் கனகராயன் குளத்தில் வீடுகளை அமைத்துள்ளதாக நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதில் ஒரு கட்டமாகக் கிளிநொச்சி, கனகராயன் குளத்தில் நிரந்தர வீடமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொன்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான 250 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை நோர்வே அரசு ‘சீட்’ நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளது.

# வவுனியாவில் கள்ள நோட்டுப் பாவனை அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு




(வவுனியா)

சட்டவிரோதமாக அச்சடிக்கப்பட்ட போலியான ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்களை வவுனியா மற்றும் கிளிநொச்சி நகரங்களில் பாவனைக்கு விட்டிருந்தது தற்போது அம்பலமாகியுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் கைதான ஏழு சந்தேக நபர்கள் மீதான அடையாள அணிவகுப்பு நேற்று வவுனியா நீதிமன்றில் நடைபெறவிருந்த போதிலும் இரகசிய பொலிஸார் நீதிமன்றுக்கு தாமதமாக வருகை தந்ததினால் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

கையடக்க தொலைபேசி கட்டணமாக ஐயாயிரம் ரூபாய் வவுனியா நவீன கடைத்தொகுதி ஒன்றில் செலுத்தப்பட்டுள்ளது. பின்னர் அந்த நோட்டு போலியானது தெரியவந்தது.

குறித்த தொலைபேசி இலக்கத்தைக் கொண்டு ஒரு சந்தேகநபர் கைதானார். அவருடைய விசாரணையின் பொருட்டு மேலும் 6 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாட்டின் பல பாகங்களிலும் இவர்கள் போலியான ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளை புழக்கத்திற்கு விட்டமை விசாரணையின்போது தெரியவந்துள்ளது. குறித்த ஏழு பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (39)

# சோலை வரியைச் செலுத்துங்கள் தவறினால் சட்ட நடவடிக்கை

## நல்லூர் பிரதேச சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சோலை வரி கட்டாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் பலர் நீண்ட காலமாக சோலை வரி செலுத்தாமல் உள்ளனர்.

சோலை வரி கட்டுவது பிரதேச சபையினரிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அல்ல. சோலை வரி செலுத்திய பற்றுச்சீட்டு காணி தொடர்பான ஆவணங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. மின்சாரம், நீர் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு சோலை வரிப்பத்திரம் அவசியமானதாகும்.

எனவே இவற்றை உணர்ந்து சோலை வரியைத் தவறாது செலுத்த வேண்டும். தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கா)

# சிற்றூழியர் நியமனம்

(ஆனைக்கோட்டை)

யாழ். குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்களில் ஜூன் மாதம் முதல் சிற்றூழியர்கள் பலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நியமனங்களில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு 3 பேரும், சங்கானை பிரதேச செயலகத்திற்கு 3 பேரும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதேபோன்று ஏனைய பிரதேச செயலகங்களிலும் வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பிரதேச செயலகங்களில் நிலவிவந்த சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாகவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

# விளையாட்டு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வண்ணான் குளம் இராயப்பர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்வித் திணைக்கள முன்பள்ளி உத்தியோகத்தர் ஜெயம் சபாபதி, முல்லைத்தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (40)

# மயானங்கள் துப்புரவாக்கல் நல்லூர் பிரதேச சபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல மயானங்களையும் துப்புரவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் கோண்டாவில் இந்து மயானம், கட்டை ஆலடி இந்து மயானம் ஆகியவற்றில் காணப்பட்ட பற்றைகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் மயானத்திற்கு சடலங்களைக் கொண்டு செல்பவர்கள் தற்போது இலகுவாக சென்று வர முடிகிறது.

தொடர்ந்தும் இப்பிரதேசத்தில் உள்ள மயானங்கள் பலவற்றில் துப்புரவுப் பணிகள் இடம்பெறவுள்ளதாக பிரதேச சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (கா)

# க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கலாம்

(அச்சுவேலி)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடம் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை ரீதியாக முதலாம் மற்றும் இரண்டாம் அமர்வுகளில் தோற்றவுள்ள மாணவர்கள் தத்தமது பாடசாலைகளினூடாகவும், தனிப்பட்ட பரீட்சர்த்திகள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்று முழுமையாகப் பூரணப்படுத்தி பரீட்சைக்கான கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினையும் இணைத்து தமது விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

# கருத்தமர்வு

(குருநகர்)

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து மாலை 3 மணி வரை வன்முறையற்ற தொடர்பாடல் கருத்தமர்வு மாதகல், சென்.ஜோசப் மகா வித்தியாலய தரம் 11 மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் சர்வதேச சமாதான தினத்தை முன்னெடுக்கும் முகமாக யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர் மத்தியில் மேற்படி கருததமர்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (68)

# வினாத்தாள் மதிப்பீடு விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

இவ்வருடம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விணணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர், எண்கணிதப் பரீட்சகர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் கடந்த வருடங்களில் இப்பணிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்களது சொந்த முகவரிக்கே விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்ட அதேவேளை, பாடசாலைகளுக்கும் இது தொடர்பான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து திணைக்களத் தலைவர் அல்லது அதிபரின் உறுப்படுத்தலுடன் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (03)

# வலி. வடக்கில் குளங்கள் புனரமைப்பு



வழுக்கையாற்றுத் திட்டத்தின் கீழ் வலி.வடக்குப் பிரதேசத்தில் 2 குளங்களின் புனரமைப்புப் பணிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசன திட்டமிடல் பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் நன்மையடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இப்பிரதேசத்திலுள்ள வாய்க்கால்கள், அணைக்கட்டுகள் என்பனவும் திருத்தியமைக்கப்படவுள்ளது.

50 வருடங்களாக திருத்தியமைக்கப்படாது இருந்த இக் குளங்களின் புனரமைப்பிற்காக 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (22)


# யாழ்ப்பாணம் மாநகரசபை

## குருநகர் சந்தைக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2011

மாநகரசபைக்குச் சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாநகர சபையால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | - | ரூபா 400.00 (வற்வரி நீங்கலாக) |
| கேள்விப்பிணைப் பணம் | - | ரூபா 3000.00 |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 13.06.2011 - 30.06.2011 மு.ப 10.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 30.06.2011 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - | 30.06.2011 பி.ப 2.30 மணிக்கு |

| கடைகள் விபரம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை (தலா ஒரு கடைக்கு) |
|---|---|
| குருநகர் சந்தைக் கடைகள் (மேல்தளம்) (36) | |
| 25 தொடக்கம் 32 வரை 08 கடைகள் | 22,000.00 |
| 53 தொடக்கம் 63 வரை 11 கடைகள் | 22,000.00 |
| 65 தொடக்கம் 70 வரை 06 கடைகள் | 22,000.00 |
| 72 தொடக்கம் 82 வரை 11 கடைகள் | 22,000.00 |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா**
**மாநகர முதல்வர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C/773)



# பகிரங்க ஏல விற்பனை

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாவிக்கப்பட்டு தற்போது பாவனையில் இருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் 22.06.2011 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. பொருட்களின் விபரம் கீழ் காட்டப்பட்டுள்ளன.

1. பாவித்த ஓடுகள்
2. பாவித்த பனை மரங்கள், தீராந்திகள்.
3. பழைய கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட இரும்புக் கேடர்கள், பழைய இரும்புகள்
4. பழைய இரும்புக் கட்டில்கள், மரக் கட்டில்கள்
5. நோயாளர் சில்லு வண்டிகள்
6. நோயாளர் தள்ளு வண்டிகள்
7. பழைய மேசைகள் (மரம், இரும்பு)
8. பழைய அலுமாரிகள் (மரம், இரும்பு)
9. கதிரைகள் (மரம், இரும்பு)
10. கதவுகள், ஜன்னல்கள், மர நிலைகள்
11. பழைய மின்விசிறி உதிரிப் பாகங்கள்
12. வாகன ரயர்கள் (பாவித்தவை)
13. பாவனையில் இருந்து அகற்றப்பட்ட சத்திரசிகிச்சைப் பொருட்கள்.
14. அன்ரனா பைப்புகள்
15. சமையலறையில் பாவிக்கப்பட்ட பொயிலர்
16. சமையலறையில் பாவித்த அலுமீனிய பாத்திரங்கள்
17. பாவனையில் இருந்து அகற்றப்பட்ட குளிரூட்டிகள்
18. பாவனையில் இருந்து அகற்றப்பட்ட இதர பொருட்கள்

மேற்படி ஏல விற்பனையின் போது பொருட்களைப் பெற விரும்புபவர்கள் உடனடியாக முழுப் பணத்தையும் செலுத்தி போதனா வைத்தியசாலையில் இருந்து அன்று மாலை 4 மணிக்கு முன்னர் பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருட்களைப் பார்வையிட விரும்புபவர்கள் 13.06.2011 தொடக்கம் 17.06.2011 வரையான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பார்வையிடலாம்.

**வைத்திய கலாநிதி பவானி பசுபதிராசா**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(C/772)

எவ்வளவு பணம் சேர்க்கமுடியுமோ அவ்வளவு சேருங்கள். எவ்வளவு குறைவாக செலவிடமுடியுமோ, அவ்வளவு செலவு செய்யுங்கள். எவ்வளவு தூரம் சேமிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சேமியுங்கள். எவ் வளவு கொடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் கொடுத்து உதவுங்கள். - ஜான் வெஸ்லி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## துயர வேட்டை;

எங்கள் மக்களின் துன்ப துயரங்களையும், வாழ்வுத்தேவைகள் பூர்த்தியாக்கப்படாமல் அவர்கள் அல்லலுறுவதையும் கண்டு ஒருவர் மனம் வருந்தக் கூடும்; அல்லது கொதிப்படையவும் கூடும். மனிதாபிமானமும் மக்கள்பால் அக்கறையும் உள்ள அவர் செய்யக்கூடியதென்ன? அல்லது செய்ய வேண்டியதென்ன?

இந்தக் கேள்விக்கான பதில், எல்லோரிடமும் ஒரே மாதிரியாக இல்லை. ஆனால், வெவ்வேறான அந்தப் பதில்களில் இருந்துதான் நம் குழப்பத்திற்கான தெளிவையும் வந்தடையமுடியும்.

கஷ்டப்படுகிறவர்களை எங்கு கண்டாலும் உடனடியாக அவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகள் அனைத்தையும் கிடைக்கச் செய்துவிடவேண்டும் என்பது சிலர் துடிப்பாக இருக்கக்கூடும்.

உதவி தேவைப்படுகிறவர்கள் எண்ணிக்கை நம் இயலுமைக்கும் மேலதிகமானது என்பதால் அடுத்த கட்டமாக அரசாங்கத்திலிருந்தோ வேறு அமைப்புகளிடமிருந்தோ உதவிகளைப் பெற்று அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய முயல்வார்கள்.

அதுவும் கிடைப்பது போதுமானதாக இல்லை என்றுணர்ந்தால், உலகம் முழுவதற்கும் உரத்துச் சொல்லி உதவி கேட்பார்கள்.

இதன் தொடர்ச்சியாகவே, இந்தக் கஷ்ட நிலை இனியும் வராதிருக்க, ஒரு நிரந்தரத் தீர்வுக்காகவும் அவர்களது முயற்சிகள் இருக்கும்.

ஆனால், நிரந்தரத் தீர்வொன்று வரும் வரை மக்களின் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களை நாம் கேள்விக்குட்படுத்தியாக வேண்டும்.

அவர்களைப் பொறுத்தவரை, மக்களது உடனடிக் கஷ்டங்களைப் போக்குவதென்பது அந்த மக்களுக்கு அற்ப சலுகைகளை வழங்குவது போலென்றும், இந்தக் கண்துடைப்பு அபிவிருத்திகளுக்கு மயங்காமல் நிரந்தரத் தீர்வை நோக்கி உறுதியுடன் கஷ்டங்களைச் சகித்துக் காத்திருக்கவேண்டுமென்றும் கருதுகிறார்கள்.

தவிரவும், நமது மக்களின் கஷ்டங்களை தாங்கள் உலகம் முழுவதற்கும் உரக்கச் சொல்லிக்கொண்டிருப்பதால்தான் ஏதோ சிறு சிறு உதவிகளையேனும் இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. என்றும் சொல்கிறார்கள்.

உலக நாடுகளெங்கும் பரந்திருக்கும் நம்மவர்களிடம சொல்லியே உதவிகளைச் செய்ய வைக்க முடியாதிருப்பவர்கள், உலக அரசாங்கங்களுக்குச் சொல்லி இந்த அரசாங்கத்தைச் செய்ய வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்வது நிச்சயம் காகம் உட்கார்ந்து பனம்பழம் விழுவது மாதிரிக் கதைதான்.

இவர்கள் சொல்லித்தான் இங்குள்ள மக்களின் கஷ்டங்களும் பிரச்சினையும் உலக நாடுகளுக்குத் தெரியவேண்டும் என்ற நிலை இன்றைக்கு இல்லை. அவ்வாறிருக்கையில், அல்லல் வாழ்விலிருக்கும் மக்களுக்கு உடன் செய்யக்கூடிய உதவிகளையும் செய்ய முற்படாமல் பெருங்குரலெடுத்துப் பிரச்சாரம் மட்டும் செய்து கொண்டிருப்பது இவர்களது அரசியல் லாபத்துக்காகவே தவிர, மக்களுக்காக அல்ல. பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாவதில்லை என்று பாரதி சொல்லியதும் இதுபோன்றவர்களுக்காகவே!

அரசியலாளர்கள் என்று மட்டுமில்லாது கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களும் இங்குள்ள கஷ்டங்களை மட்டுமே படம் பிடித்துச் சொல்வதுடன் தங்களது மக்கள் மீதான அக்கறையை முடித்துக்கொள்கிறார்கள் இது அவர்களுக்கான மனிதாபிமானப் புகழோ சன்மானமோ பெற்றுக் கொள்வதோடு முடிந்துவிடுகிறது.

இந்த வகையான அரசியலாளர்களும், இவர்களும் மக்கள் கஷ்டங்களை மேலும் மேலும் உணர்ச்சிகரமாகச் சொல்வதற்கு முற்படும் விழைவினால், அந்தக் கஷ்டங்கள் மேலும் மேலும் நீடிக்கவேண்டும் என்று (இவர்களறியாமலே கூட) விருப்பப்படும் நிலைக்குச் சென்றுவிடுகின்றனர்.

அதனால்தான் இவர்கள் நேற்றுச் சுட்டிக்காட்டிய கஷ்டங்கள் இன்றைக்கு நிவர்த்திக்கப்பட்டுவிட்டதென்றால், அவற்றை அப்படியே மறந்தும் மறைத்தும் விட்டுப் புதிய கஷ்டம் ஒன்றைக் கண்டுபிடித்துப் பிரலாபித்துக் கொண்டிருக்கப் போய்விடுகிறார்கள்.

இவர்களைப் பொறுத்தவரை, மக்களின் கஷ்டங்கள் தீர்க்கப்படுவதற்கானவை அல்ல; அரசியல் லாபத்துக்கானவை என்றே புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

- ஆசிரியர்

# முதலாளித்துவ பொருளாதாரத்துக்கு எதிராக அணிதிரளவேண்டும்

(குருநகர்)

1947ஆம் ஆண்டு போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டவர்கள் என்பது அனுபவம் வழங்கிய பாடம், தெரிந்தோ, தெரியாமலோ இந்தச் சதிக்குத் துணை போன தொழிற்சங்கங்களும், தொழிலாளரும் நவ குடியேற்றக்காரர்களின் ஆட்சிக்கு இரையாகி இன்றுவரை மீள முடியாமல் அடிமைகளாகத் தவிக்கிறார்கள்.

யாழ். ஆரியகுளம் உயர்கலைக்கல்லூரியில் நடைபெற்ற தொழிற்சங்கப் போராளிகள் கந்தசாமி, சோமபால நினைவுக் கூட்டத்தில் பேசுகையில் தோழர் சி. இராமச்சந்திரா மேற்கண்டவாறு கூறினார்.

ஓய்வு பெற்ற வங்கியாளர் சொ. சிவபாலன் (சிற்பி) தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்தும் சி. இராமச்சந்திரா பேசுகையில் தெரிவித்ததாவது

இதற்கான விமோசனம் தாய்மொழி மூலம் கல்வி கற்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் தொழிலாளர்கள் மத்தியில்தான் உண்டு. முதலாளித்துவத்தின் சந்தைப் பொருளாதார முறைமையும், உலக மயமாக்கல் செயல்பாடும் தென்கிழக்கு ஆசிரியாவிலுள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களையும், தொழிலாளரையும் தேசிய மட்டத்தில் என்றில்லாமல் சர்வதேச மட்டத்திலும் வர்க்க அடிப்படையில் அணிதிரண்டு போராடவேண்டிய கட்டாயத்தை உருவாக்குகின்றன.

இந்தத் தேவையை உணர்ந்து செயல்படுதல் இன்றைய தமிழ், சிங்கள, முஸ்லிம் இளம் சந்ததியினரதும், மூவினத்தொழிலாளர்களினதும் வரலாற்றுக் கடமையாகும். அதை நிறைவேற்ற தோழர் கந்தசாமி 1947இல் உள்வாங்கிச் செயற்பட்ட ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், பேணும் சித்தாந்தத்தை செயல்படுத்தல் தவிர்க்க முடியாதது மட்டுமல்ல. அதற்கு மாற்றீடு ஏதுமில்லை என்றார். தோழர்கள் ச.தியாகலிங்கம் சா.தவராசா ஆகியோரும் நினைவுரை ஆற்றினர். (68)

## பிரித்தானியாவுக்கான விசா போலி ஆவணம் சமர்ப்பித்தவர் கைது

பிரித்தானியாவுக்கு செல்ல விசாவிற்கு விண்ணப்பித்த பெண்ணொருவர் போலி அடையாள அட்டையைப் பயன்படுத்திப் பெற்ற கடவுசீட்டினை சமர்பித்திருந்தமையால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தனது கணவனுடன் சென்று இணைய விஸாவிற்கு விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடவுசீட்டுப் பெற்றிருந்த அடையாள அட்டை தொடர்பில் ஏற்பட்ட சந்தேகம் தொடர்பில் பிரித்தானிய விஸாக் காரியாலய அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து அவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் ஊடகங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

விஸா காரியாலயத்தில் சமர்பிக்கப்படும் ஆவணங்கள் எவையேனும் போலியாக இருப்பின் அவர்கள் மீண்டும் 10 வருடங்களுக்கு விஸாவிற்கு விண்ணப்பிக்க முடியாது என உயர்ஸ்தானிகரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கிளை புனரமைப்பு

துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் வலி.வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கூட்டுறவு சங்க கிளைகளை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் இளவாலை (மயிலங்கூடல்) பன்னாலை, துர்க்காபுரம் தெல்லிப்பளை, ஆகிய பிரதேசங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. (22)

## தனியார் வீட்டில் இயங்கும் பூம்புகார் அ.த.க. பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பூம்புகார்ப் பகுதியில் தனியார் வீடு ஒன்றில் பூம்புகார் அ.த.க. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 22 மாணவர்கள் வரை கல்வி கற்றுவரும் இப்பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர் உட்பட நான்கு பேர் நியமிக்கப்பட்டு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் குறித்த பாடசாலைக்கான கட்ட வேலைகள் தற்சமயம் நடைபெற்றுவருவதாகவும் அவ் வேலைகள் முழுமையாக பூர்த்தியடைந்ததும் பாடசாலை முழுமையாக செயற்படவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடிப் பகுதிகளில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## இக்கிராணை நல்ன்புரி மக்கள் சீரான குடிநீரின்றி அவலம்

(கட்டுவன்)

வலிவடக்கு பிரதேசத்திலுள்ள இக்கிராணை நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் மக்கள் தங்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் இதனால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வலிவடக்கு பிரதேச செயலக பிரிவை சேர்ந்த மக்களில் 120 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்போது குறித்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் தங்களுக்கு குடிநீர் சீரான முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் இதனால் குடிநீர் இன்றி அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பிரச்சினை தொடர்பாக வலிவடக்கு பிரதேச செயலர், அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (22)

## நீர் விநியோகம் இன்றி ஊரியானில் எரிந்த நிலையில் சிறுபோக நெற்பயிர்கள் விவசாயிகள் கவலை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் சீரான முறையில் நீர் விநியோகம் இன்மையால் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இச்சிறுபோக நெற்செய்கைக்கான நீர் விநியோகத்தினை சம்பந்தப்பட்ட கமக்கார அமைப்பு சீரான முறையில் ஒழுங்குபடுத்தி கொடுக்கப்படாமையினால் சில விவசாய நிலங்கள் எரிந்து கருகிப்போயுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் பல முறை குறித்த கமக்கார அமைப்பிடம் நீர் விநியோகத்தினை சீர்செய்து தருமாறு கோரியும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கவனம் எடுத்து நீர் விறியோகத்தினை சீராகப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர் (110).

## கோப்பாய் நாவலர் வித்தியாசாலையை ஜனாதிபதி மகிந்த திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஊவாமாகாண முதலமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவினரினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் மாடிக்கட்டடத்திறப்பு விழா நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளதாக வடமாகாண கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் குறித்த கட்டடத்தின் வேலைகள் அநேகமாக பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளது. இதற்கான திறப்பு விழா நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகளை ஊவாமாகாண சபை ஆளுநர் மேற்கொண்டுவருவதாகவும் தெரியவருகின்றது.

குறித்த கட்டத்திற்கு ஊவா மாகாணமுதலமைச்சரின் ஆறுமில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் முன்று மில்லியன் ரூபா வரையான நிதியையும் ஊவாமாகாண சபை வழங்கவுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.

அத்துடன் இக் கட்டட நிர்மாணவேலைகளில் இலங்கை இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினரது பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. (பா)

# பாசையூர் கடலோர இறங்குதுறை அணைக்கட்டு அமைப்பதில் தாமதம்

(பாசையூர்)

பாசையூர் இறங்குதுறை மற்றும் கடலோர அணைக்கட்டு போன்றவற்றை புனரமைக்கும் பணிகளில் தாமதம் ஏற்படுவதாக மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் புனரமைப்புக்கென கடந்த மாதங்களுக்கு முன்னரே தென்பகுதியில் இருந்து பாரிய கருங்கற்கள் எடுத்துவரப்பட்டு பறிக்கப்பட்டுள்ளன.

கற்கள் பறிக்கப்பட்டும், புனர்நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

கரையோர அணைக்கட்டுக்களை அமைக்கவும் மற்றும் இறங்குதுறை வசதி ஏற்படுத்தும் முகமாக அண்மையில் பொருட்கள் பறிக்கப்பட்டன.

இந்தக் கடலோரப் பகுதிகளில் இறங்குதுறை வசதியின்மையால் மீனவர்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர். (வி)

## அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு ஆறாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்து வந்தவருக்கு யாழ். நீதிமன்றம் 6000 ரூபா குற்றப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் கோப்பாய் பகுதியில் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தின் முன் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்தராஜா குறித்த நபரை 6000 ரூபா குற்றப்பணமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (பா)

## பாலம் புனரமைப்பு


(பாசையூர்)

கொழும்புத்துறை இலந்தைக் குளம் வீதியில் புளியடிச் சந்தியில் உள்ள பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருட இறுதியில் பெய்த கனத்த மழையினால் இந்தப் பாலம் சேதமுற்றதால் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரிதும் சிரமப்பட்டனர்.

தற்போது இப்பாலத்தை யாழ். மாநகராட்சி மன்றம் புனரமைப்புச் செய்து வருகின்றன. (வி)

## யுனிசெவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு தளபாட விநியோகம்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கான தளபாடங்கள் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தினரால் கதிரை, மேசை என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ். எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி கதிரைகள் தற்சமயம் வலய ரீதியாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றில் மாணவர்களுக்கான மேசைகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் வந்து சேரவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவையும் யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களுக்கும் உட்பட்ட பாடசாலைகளில் தளபாட பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப் படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)



காங்கேசன்துறை வீதியில் யாழ். ப.நோ.கூ. சங்க கட்டடத்தில் நேற்றுக்காலை ஹச் வாடிக்கையாளர் சேவை நிலையம் நிறுவன உயர் அதிகாரிகளால் திறந்து வைக்கப்படுவதையும், வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் வானதி வில்சன் வாடிக்கையாளருக்கு சிம் அட்டை வழங்குவதையும் காணலாம். (படம்: கார்த்திகேயன்)

## வெங்காயச் செய்கையில் யாழ். விவசாயிகள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் இம்முறை துரித ஆர்வம் காட்டியுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் உள்ள அநேகமான விவசாய நிலங்களில் சின்ன வெங்காயச் செய்கை மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

விதை வெங்காயத்தின் விலை அதிகரிப்பையும் பொருடபடுத்தாது, விவசாயிகள் அவற்றைக் கொள்வனவு செய்து செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேசமயம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சின்ன வெங்காயம் குடாநாட்டுச் சந்தைகளில் தற்போது விற்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சின்ன வெங்காயம் கிலோ 120 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இது இவ்வாறிருக்க குடாநாட்டு சின்னவெங்காயம் கிலோ 150 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. (வி)

# பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்

## வலயமட்டப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பன்மைத்துவ கலாசாரத்தினூடாக சமாதானம் வலயமட்டப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு :-

சித்திரம் பிரிவு -I

ஆர். சங்கவி (யாழ். நெல்லியடி எம்.எம்.ரி.எம்.எஸ்), என்.அருளினி (மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ்), கே.யதுசாளினி (தும்பளை சிவப்பிரகாசம் ம.வி).

பிரிவு -II

ஆர்.ஆர்த்திகா (வட. பெண்கள் மத்திய கல்லூரி), கே.சசிதரன் (மருதங்கேணி எச்.ரி.எம்.எஸ்), கே.யதுகோபி (தும்பளை சிவப்பிரகாசம் ம.வி).

பிரிவு III

எஸ்.கஜிந் (மருதங்கேணி எச்.ரி.எம். எஸ்), எஸ்.கோபிகா (வட்டு. மத்தி பெண்கள் கல்லூரி), எஸ்.அஜந்தன் (பொலிகண்டி எச்.ரி.எம்.எஸ்).

பிரிவு IV

வை.பகீதரன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ.பிரசாந்தன் (மணற்காடு றோ.க.த.க பாடசாலை), கே.சிவசுதன் (கரணவாய் ம.வி).

பிரிவு V

எம்.அபிராம் (நெல்லியடி ம.ம.வி), ஜெ.நிருபன் (ஹாட்லிக கல்லூரி).

கவிதை

பிரிவு - I

ஆர். றொனாட்டோ (கலட்டி றோ.க.த.க. பாடசாலை), ஜெ.ஜெயவினிதன் (ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்.), எஸ்.அருள்ராஜ் (நெல்லியடி எம்.எம்.வி).

பிரிவு II

எஸ்.சிந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி), என்.டினுஜா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை), வி.சாளினி (கரணவாய் ம.வி).

பிரிவு III

எம். மாதுரி ((மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி), எஸ். அனுசியா (கரணவாய் பொன்னம்பலம் வி.)

பிரிவு IV

ஏ. அகிதா (உடுத்துறை ம.வி). (109)

# அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிக்கான விண்ணப்பம்

(இணுவில்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடரை இவ்வாண்டும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாரம்பரிய கலை கலாசார மரபுரிமைகளின் விழிப்புணர்வையும், வினைத்திறனூடான அரச சேவையைக் கட்டி எழுப்புவதைக் கருத்தில் கொண்டும் சிறுகதைகள், பாடலாக்கம், கவிதையாக்கம், சிறுவராக்கம், குறுநாடகம், ஓவியம் போன்ற ஆறு துறைகளில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் அரச ஊழியர்கள் தமது ஆக்கங்களை யூலை மாதம 30 ஆம் திகதிக்கு முன் செயலாளர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, 8 ஆம் மாடி, செத்சிலிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் 20' என எழுதி அனுப்புதல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (115)

## சிறந்த கிராம சேவையாளருக்கான விருது



(யாழ்ப்பாணம்)

அமரர் நவாலியூர் செல்வி ஹேமலதா செல்வராஜாவின் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிராம சேவையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதில் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் மிக வினைத்திறனாக சேவையாற்றிய மூவர் இவ்விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இதன் பிரகாரம் உடுவில் பிரதேச செயலக பிரிவில் இ.எ.மசனட் முதலாம் இடத்தையும், கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் பா.லலித் 2 ஆம் இடத்தையும், தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் கே.பூபால சிங்கம் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளதுடன், இவர்களுக்கே இவ் விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளது.

# சமூக நல மேம்பாட்டுத் திட்டங்களை சங்கங்கள் முன்னெடுக்க வேண்டும்!

**வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார்**

(மானிப்பாய்)

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த மட்டில் அவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தால் என்ன? பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தால் என்ன? அவை கூட்டுறவுக் கொள்கைகளுக்கேற்ப சமூக நல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு சேவை செய்ய



கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அன்பளிப்பான குளிர்சாதனப் பெட்டியை வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் வழங்குகின்றார். அருகில் கொத்தணித் தலைவரும் காணப்படுகின்றார்.

வேண்டும். இவ்வாறு வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார் குறிப்பிட்டார்.

கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி வலிகாமம் கொத்தணியின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட குளிர் சாதனப் பெட்டியைப் பாடசாலை அதிபரிடம் கையளித்துப் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த மட்டில் பலவிதமான சமூக நல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன், பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

இச்சங்கங்கள் இணைந்து வலிகாமம் கொத்தணி நடத்தி வரும் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடைத் துணிகள் வழங்கி வருவதுடன், அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் மரணக் கொடுப்பனவுகளை வழங்கி வருவதுடன், பணியாளர் காப்புறுதித் திட்டம், மருத்துவ பரிசோதனைகள் திட்டம் என்பவற்றையும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகப் பதவி ஏற்றபின் நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டமையே எனது முதலாவது பொது நிகழ்வாகும். இதனையிட்டு நான் மகிழ்ச்சி அடைவதுடன், வலிகாமம் கொத்தணியின் செயற்பாட்டையும் பாராட்டுகிறேன் என்று கூறினார்.

வலிகாமம் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்றையும் கையளித்தார். இந நிகழ்வில் கொத்தணியின் செயலாளர், நெறியாளர் குழு உறுப்பினர், பொது முகாமையாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முகாமைத்துவ பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ சேவை அதிசிறப்பு தெரிவுப் பரீட்சை இன்றும் நாளையும் யாழ். நகரில் மூன்று பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இரண்டு பரீட்சை நிலையங்களும், யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் ஒரு பரீட்சை நிலையமும் குறித்த பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் குறித்த பரீட்சை இலங்கை பூராவும் நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் காணப்படும் பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியா மன்னார் வீதியிலுள்ள பட்டாணிச்சூர் முஸ்லிம் தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இச்செயலமர்வில் வடமாகாணத்திலுள்ள சகல பள்ளிவாசல்களின் தலைவர், செயலாளர்கள் அல்லது இரு உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு திணைக்கள அதிகாரி எம். எச். நூறநல் அமீன் வேண்டுகின்றார். (119)

## 3 மணிவரை கற்றல் செயற்பாடுகள்; ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சிரமம்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட சில பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் பிற்பகல் 3 மணி வரை இடம்பெற்று வருவதால், மாணவர்கள் பெரும் சிரமங்களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஆரம்பப் பாடசாலைகளில் இவ்வாறு அதிக நேரங்களில் கற்பிப்பதல் நடவடிக்கைகளை மேற்கொள்வ தால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் மாணவர்களின் ஆரோக்கிய நிலை பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வி)

## புனரமைப்பு வேலை ஆரம்பம்

முல்லைத்தீவு-மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பனங்காமம் குளத்தினுடைய புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் கீழ், இக்குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சி. ஜெயகாந் மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். சுபாகரன் மற்றும் பிரதேச கமக்கார அமைப்புகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (110)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(11.06.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

வைகாசி 28 ஆம் நாள்.

இராகுகாலம் 8.52–10.22, சுபநேரம் 2.52–4.22

நட்சத்திரம் அத்தம் காலை 7.56 வரை

திதி: தசமி பி.ப. 12–11 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காரியத் தடை, பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், உடல் நலக்குறைவு, கவலை.

ரிஷபம்:– பணக் கஷ்டம், உடம்பு நலம் பாதிப்பு, அயலவர் பகை, குடும்பத்தில் கவலை, விரக்தி.

மிதுனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர வருகை, தூரத்திலிருந்து நல்ல சேதி, உடல் நலமின்மை, விபத்து.

கடகம்:–உடம்பு நல்ல ஆரோக்கியம், பணம்வரும், சுபகாரியம், குடும்பத்தில் நிம்மதி, மனமகிழ்ச்சி.

சிம்மம்:– பணக்கஷ்டம், காரியத் தடை, உடல் நலமின்மை, திருமணப் பேச்சு, மகிழ்ச்சி.

கன்னி :– பண வரவு, தேக ஆரோக்கியம், காரிய சித்தி, குடும்பத்தில் குதூகலம், நல்லசேதி.

துலாம் :– பண வரும், மனமகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், நண்பர் வருகை, அயலவர் உதவி.

விருச்சிகம்:– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், தேக ஆரோக்கியம், சுப காரியம், தூரத்திலிருந்து நல்ல சேதி.

தனுசு:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனமகிழ்ச்சி, நண்பர் வருகை, அயலவர் பகை.

மகரம்:– பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, தூரத்திலிருந்து நல்ல சேதி, மகிழ்ச்சி.

கும்பம் :– உடல் நலம்பாதிப்பு, பணக் கஷ்டம், காரியத் தடை, மனவிரக்தி, கவலை.

மீனம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, அயலவர் தொல்லை, தேக ஆரோக்கியம்.

## யாழ். நகரின் கழிவு நீரால் அசுத்தமாகும் புல்லுக்குளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புல்லுக்குளத்தின் கழிவு நீர் அதிகளவில் தேங்குவதால்தான் இக்குளம் அசுத்தமாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, நகரில் உள்ள வடிகால்வாய்கள் ஊடாக வெளிச்செல்லும் கழிவு நீர் கந்தப்பசேகரம் வீதியூடாகச் செல்லும் வடிகால்வாய்கள் மூலம் இக்குளத்திற்கே செல்கின்றன. இந்தக் கழிவு நீரினால் இக்குளம் மாசடைவதோடு, துர்நாற்றமும் வீசுகின்றது.

குறிப்பாக, குளத்தில் தேங்கும் கழிவு நீர் கடலுக்கு பாய்ந்து செல்வதும் தடைப்பட்டுக் காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்தக் குளம் அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வி)

## மக்களின் பல்வேறு தேவைகளுக்கு இலங்கை வங்கி கடன் வழங்குகிறது

(ஆனைக்கோட்டை)

இலங்கை வங்கி பல்வேறு வகையிலான கடன் கொடுப்பனவுகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. இதில் சுயதொழிலுக்கான கடன் வசதிகள், குத்தகைக்கடன், வியாபாரக்கடன், விவசாயக்கடன், கடற்தொழிலுக்கான கடன் வசதிகள், அபிவிருத்திக் கடன் போன்ற கடன் வசதிகளை மக்களுக்கு வழங்கி வருவதுடன், மக்கள் இதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கக்கூடியதாக காணப்படுகிறது என இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க. இலட்சுமணசர்மா தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையினால் நவாலி வடக்கு தனலட்சுமி மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் ஆக்கும் நிகழ்வு அண்மையில் நவாலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி இந்திராணி கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலக கணக்காளர் சரோஜினி சந்திரசேகரம் கலந்து கொண்டார். அத்துடன் இங்கு பயனாளிகளுக்கு சுயதொழிலுக்கான கடன் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. (104)

தமிழ் இனி மெல்லச் சாகும், தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேணுமெண்ட கூற்றுகளை அரசியல்வாதிகளும், தமிழறிஞர்களும் அவ்வப்போது சொல்லி வந்ததைக் கேட்டிருக்கிறம்.

தமிழ் மக்களின் கலாசாரம் அப்படியாப்போச்சு!

கண்டதே கோலம் கிடைச்சதே பெருமையென இந்தக் காலத் தமிழ்ச்சனம் மிக நல்லாவே மாறிப் போச்சு! இன்னும் புதிது புதிதாப் பிறக்கிற புள்ளையளைக் கேக்க வேணுமே!

இப்ப கன்னடம், மலையாளம் எண்டிருக்கிற மொழியெல்லாம் தமிழுக்குப் பின்னால தமிழர்களாய் இருந்தவை உருவாக்கிக் கொண்டு மாறினதுதானெண்டு ஒரு வரலாற்று ஆய்விருக்கு.

ஏன் கனக்க, இண்டைக்குப் புலம் பெயர்ந்து போயுள்ள தமிழர்களின் அடுத்த தலைமுறை எந்த மொழியைப் பேசப்போகுது?

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ்; ஆதாமும் ஏவாளும் ஆதிமனிதர் - இந்தக் கூற்றுகளை வைச்சுப் பாருங்கோவன்.

அப்ப வெள்ளைக்காறனும் எங்கட சொந்தக்காரன்தான் எண்டது என்ர புடி!

இப்ப நான் என்னத்தைச் சொல்லவாறனெண்டா இப்ப உள்ள எங்களது புள்ளையளிட்டை வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைஞ்சு போச்சுதெண்டதைத்தான்.

1981ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் தீக்கிரையாகிப் போனதைக் கேள்விப்பட்டதும் உயிரை விட்டவர் எங்கட தாவீது அடிகள். இவருக்குப் பத்துக்கும் மேற்பட்ட மொழிகள் தெரியுமெண்டு கேள்வி.


அப்படிப்பட்ட மூதாதையர் வாழ்ந்த மண்ணில இண்டைக்கு வாசிப்புப் பழக்கம் அருகிப் போச்சுதெண்டா என்ன காரணம்.

பொதுவாக எழுதப்படிக்கிறேண்டா எல்லாருக்கும் கொஞ்சம் கசப்புத்தான். இப்ப உந்தத் தொலைக்காட்சிப் பெட்டியளும் மலிஞ்சு போச்சு, அதோட மெகா சீரியல்கள் வேற மாறி, மாறிப் போடுறாங்கள்.

ஒரு நாளேல மட்டும் பதினைந்து அரை மணி நேர மெகா சீரியல்கள் தொலைக்காட்சியளில விழுகுதெண்டால் பின்ன தண்ணிவென்னி குடிக்க சாப்பிடக்கூட நேரம் வராது தானே?

அந்த நாளேப் பெண்டுகள் வேலைபளை முடிச்சிட்டு சும்மா இருந்தா ஏதாவதொண்டை எடுத்து வைச்சுப் படிச்சுக் கொண்டிருக்குங்கள்.

அதுகளெல்லாம் இப்ப டிவீக்கு முன்னால இருக்குதுகள், உப்புடித்தான பள்ளிக் கூடங்களிலயும் கணினிக்கு முன்னால இருக்குதுகள். அப்ப என்ன நடக்கும்? எண்டாலும் பாருங்கோ, எந்தத் தொழில் நுட்பத்துக்கும் வாசிப்பெண்டது இல்லாமல் நடக்குமே?



# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் யூனியன் சம்பியன்



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



வட இந்து மகளிர்



புத்தூர் சோமஸ்கந்தா

(நெல்லியடி)

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் உரிமையாளர் நாகரத்தினம் கலந்து கொண்டார்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்து யூனியன் கல்லூரி வெற்றியை தன்வசப் படுத்திக் கொண்டது.

இதனால், இடைவேளைக்கு முன்னர் 20 : 10 என்ற கோல் கணக்கிலும், இடைவேளையின் பின்னர் 20:07 என்ற கோல் கணக்கிலும் முன்னிலை வகித்தது யூனியன் கல்லூரி.

இதனால் ஆட்டம் முடிவடைய 40 : 17 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று யூனியன் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மோதியது.

இவ்வாட்டம் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவேளைக்கு முன்னர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி 18 : 17 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் பந்தை தன்வசப்படுத்திய புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியினர் 12 : 7 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இதனால் ஆட்டநேர முடிவில் 30 : 24 என்ற புள்ளிகள் அடிப்படையில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி வென்று மூன்றாமிடத்தைப் பெற்றது.

இதில் முதலாமிடத்தைப் பெற்ற யூனியன் கல்லூரி அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 10,000 ரூபா பணமும், இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வட இந்து மகளிர் கல்லூரிக்கு வெற்றிக் கிண்ணமும் 5000 ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெற்ற புத்தூர் சோமஸ்கந்தா அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 3000 ரூபாவும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இப்போட்டி பெருமளவானோர் கண்டுகளித்தனர். (12)

## வருடாந்த விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

கைதடி - நாவற்குழி தெற்கு ஸ்ரீமகா விஷ்ணு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி - நாவற்குழி கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளியின் பெற்றோர் சங்கத் தலைவி சுகந்தினி யசோதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் சாள்ஸ், தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல் விப் பணிப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (19)

□ □ □

(சாவகச்சேரி)

சான்றோர் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் அரும்புகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், நவாலி தெற்கு மகாவித்தியாலய அதிபர் திருமதி வ. மேகலிங்கம் ஆகியோர் கௌரவிருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (19)

## கால்பந்தாட்ட அரையிறுதிக்கு பாடுமீன் - யங்ஹென்றிஸ் தகுதி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மின்னொளியில் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிக்கு பாடுமீன் மற்றும் யங்ஹென்றிஸ் அணிகள் தகுதி பெற்றன.

இப்போட்டிகள் புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் இளவாலை ஜங்ஹென்றிஸ் அணியும், சாக்கேட் சென் சேவியர் அணியும் மோதிக் கொண்டன. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி வந்த ஜங்ஹென்றிஸ் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும், கொற்றாவத்தை சிவானந்தா அணியும் மோதிக் கொண்டன. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், பாடுமீன் அணி 1 - 0 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, ஏனைய இரண்டு காலிறுதிப் போட்டிகளும் நேற்றிரவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஸ்ரீமுருகன் - வளர்மதி அணிகள் அரையிறுதியில் மோதவுள்ளன

(கைதடி)

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதவுள்ளன. இப்போட்டி இரவு 7.00 மணிக்கு இடம்பெறும். இப்போட்டிகள் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஏழாம் திகதி நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. இதில் ஸ்ரீமுருகன் அணி 2-1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மற்றொரு போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணியும் மோதிக் கொண்டன. இதில் வளர்மதி அணி 2-0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

## விளையாட்டுச் செய்திகள்

### இறுதிப் போட்டி இன்று

(சாவகச்சேரி)

வில்சன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சரசாலை கமலாசினி வித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், கமலாசினி வித்தியாலய அதிபர் எஸ். பேரின்பநாதன், 523 ஆவது படையணியின் பிரிகேடியர், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (19)

### யார் சிறந்த பயிற்சியாளர்

ஆர்செனே வெங்கரை விட ஜார்ஜ் கிரகாம் தலைச்சிறந்த பயிற்சியாளர் என முன்னாள் ஆர்செனல் கப்டன் டோனி ஆடம்ஸ் கூறினார். அஜர்பைஜானில் வெற்றி சூடும் பயிற்சியாளராக ஆடம்ஸ் திகழ்ந்து வருகிறார். அவர் கிரகாம் தலைமையின் கீழ் 2 சம்பியன் பட்டமும் வெங்கர் தலைமையின் கீழ் 2 இரட்டை சம்பியன் பட்டங்களையும் ஆடம்ஸ் பெற்றுள்ளார்.

ஆர்செனல் அணி எனக்கு பிடித்த அணி. ஆர்செனல் அணி வீரராக வருவதில் எனக்கு மிகுந்த பெருமிதம் உண்டு என்று ஆடம்ஸ் கூறினார். ஆர்செனே அணிக்கு நான் மீண்டும் அழைக்கப்படலாம். விளையாட்டு வீரராக அல்ல. பயிற்சியாளராக என்னை அழைக்கலாம். ஆர்செனே அணி 5 முன்னனி அணிகளுள் ஒன்றாக வர போராடிக் கொண்டிருக்கிறது. அணியின் பயிற்சியாளர் ஜார்ஜ் பயிற்சி திறன் பாதுகாப்பு அமைப்பு, தொழில் நுட்பத்திறன் மிக்கவர். ஆர்செனே வெங்கர் சிறந்த உளவியல் நிபுணர். இந்த விடயத்தில் வீரர்களை அணுகுவதில் அவரது திறனை பாராட்டலாம். இருப்பினும் ஜார்ஜ் மிக அற்புதமான பயிற்சியாளர். அவரது தலைமையில் 6-7 டிராப்பிக்களை வென்றுள்ளேன். இந்த வெற்றியில் வின்னர் கப் போட்டியும் உண்டு. பார்மா அணிக்கு எதிராக இந்த வெற்றி கிடைத்தது என டோனி ஆடம்ஸ் கூறினார்.



குருநாகலில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை நடைபெறவுள்ள கூட்டுறவாளர்களுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும் யாழ். மாவட்ட கூட்டுறவு அணியின் வீர, வீராங்கனைகள் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுடன் காணப்படுகின்றனர். (பா)

## நெருக்கடியைச் சமாளிக்க கற்றுக்கொள்ளவேண்டும்

இளம் வீரர்கள் நெருக்கடியான சூழ்நிலையை எளிதாகச் சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் அவர்களை சிறப்பான வீரர்களாக மாற்றும் என விராத் ஹோலி தெரிவித்தார்.

துடுப்பாட்டத்தின் போது இளம் வீரர்கள், சிரேஷ்ட வீரர்களைப் பின்பற்றக் கூடாது. எனது முதல் உலகக் கிண்ணப் போட்டியில், சேவக் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். நானும் அவரைப் பின்பற்றி இருந்தால், 40 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்து இருக்கலாம். எனது பாணியில் விளையாடியதால் தான், சதம் அடிக்க முடிந்தது. நாம் எப்போதும் சச்சின், டோனி போன்ற வீரர்களுடன் எல்லாம் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர்களை பாராட்ட லாம், ஆனால் நாம், நாமாகவே இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குற்றச்சாட்டுக்களை சுமத்துபவர்கள் ஆதாரங்களை வைத்திருக்கவேண்டும்

(லண்டன்)

இலங்கை கிரிக்கெட் அணி தொடர்பாக குற்றச்சாட்டுகளை சுமத்துபவர்கள் அதற்கான ஆதாரங்களை வைத்திருக்க வேண்டும் என முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.


இலங்கை கிரிக்கெட் துறையில் 1992 ஆம் ஆண்டிலிருந்து ஆட்டநிர்ணய சதி இடம்பெற்று வருவதாக முன்னாள் அணித்தலைவர் ஹசான் திலகரட்ன தெரிவித்த குற்றச்சாட்டு குறித்து இங்கிலாந்து செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு முரளிதரன் பதிலளிக்கையில், அவர் (ஹசான்) சில ஆதாரங்களை வைத்திருக்க வேண்டும். ஆதாரம் மிக முக்கியம். ஆதாரமில்லாமல் குற்றம் சுமத்தக்கூடாது என்றார்.

தான் அறிந்தவரை எந்தப் போட்டியும் முடிவும் முறையற்றவிதமாக நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என முரளி கூறினார்.

எந்தவொரு வீரரும் இப்படிச் செய்தமைக்காக அவர்களை நான் சந்தேகப்பட முடியாது. ஏனெனில் சில வீரர்கள் மோசமான அடியொன்றை அடிக்கலாம். மோசமாகப் பந்துவீசலாம். அது அவர்களின் நிலையைப் பொறுத்தது.

எனவே இந்தக் குற்றச்சாட்டுகள் வரலாம். ஆனால் எவரேனும் தவறு செய்தார்கள் என்பதை நிரூபிப்பதற்கு அதிக ஆதாரங்கள் வேண்டும். இதுவரை நான் அறிந்த வகையில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. இது எனது கருத்து. ஆனால் எவரேனும் ஆதாரங்களை முன்வைத்து நிரூபித்தால் எனது எண்ணம் தவறாகக் கூடும் என முரளிதரன் தெரிவித்தார்.



## கடிச்சை நீக்கியிருக்கக்கூடாது

(சிட்னி)

அவுஸ்ரேலிய வீரர்கள் ஒப்பந்தத்தில் இருந்து சைமன் கடிச்சை மட்டும் நீக்கியுள்ளதுடன் நிறுத்தியிருக்கக் கூடாது என ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

கடிச் மட்டும் வயதானவர் அல்ல. பொண்டிங், ஹஸி, பிரட் ஹடின் ஆகியோரையும் நீக்கியிருக்க வேண்டும் என்பது போல் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

கடிச் தனது ஒப்பந்தத்தை இழந்தது துரதிர்ஷ்டவசமானது. ஏனெனில், அவர் நன்றாக விளையாடி வந்தார் என்றே நான் கருதுகிறேன். ஆனால் அவரை ஒப்பந்தத்தில் சேர்க்காததன் தர்க்கம் என்ன என்பதை அறிவேன். அணி மாற்றத்தில் இருக்கிறது என்று கிரிக்கெட் சபை கருதுகிறது என்றால், மேலும் பல இளம் வீரர்களைச் சேர்த்திருக்கவேண்டும். ரசிகர்களும், பொதுமக்களும் கிரிக்கெட்டை ஆதரிக்கவேண்டுமென்றால் சில இளம் வீரர்களைத் தேர்வு செய்வதில் தவறில்லை. மாற்றத்தில் இருக்கிறது அணி, எங்களுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள் என்று கூறிக்கொண்டே ஏன் வயதான வீரர்களையும் அணியில் வைத்திருக்கவேண்டும்? 35,37 வயதான வீரர்களை வைத்திருக்க வேண்டும்? இளம் வீரர்களை அணியில் சேர்த்து பின்னர் நாங்கள் மாற்றத்தில் இருக்கிறோம் என்று கூறுங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.



### சப்பலே காரணம்

வீரர்கள் ஒப்பந்தத்திலிருந்து கடிச்சை நீக்கியதற்கு சப்பலே காரணம் என்றும் இதன் காரணமாக அவுஸ்ரேலியாவில் பல எதிர்ப்பு கிளப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிரெக் சப்பல் சமீபத்தில் தான் ஆஸி அணியின் தேர்வுக் குழுவில் திறமை அடையாளம் காணும் பிரிவில் தலைமைத் தேர்வாளராக இணைந்தார். இதன் பின்னரே கடிச் நீக்கப்பட்டுள்ளார். எனவே, கடிச்சின் நீக்கத்திற்கு சப்பல்தான் காரணம் எனக் கூறப்படுகின்றது.

## நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை கிரிக்கெட் சபை

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை தனது பணியாளர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க வழியில்லாமல் பெரும் நிதிச் சிக்கலில் சிக்கித் தவிக்கிறது.

இந்தியா, பங்களாதேஷுடன் இணைந்து இலங்கையும், சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ணத் தொடரை நடத்தின. இதற்காக இலங்கையில் அம்பாந்தோட்டைப் பகுதியில் புதிய மைதானம் கட்டியது மற்றும் கொழும்பு, கண்டியில் இரண்டு மைதானங்களைப் புதுப்பிப்பதற்காக, 14 கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டது. ஆனால் திட்டமிட்டதை விட அதிகளவு செலவு ஏற்பட்டது. இப்போது இதைச் சரிசெய்ய இலங்கை அரசுவங்கிகளை கிரிக்கெட் சபை அணுகியுள்ளது.

இதுகுறித்து கிரிக்கட் சபை பொருளாளர் சுஜீவா ராஜபக்ஷ கூறுகையில், இலங்கையின் மிகப்பெரிய விளையாட்டு அமைப்பு, நிதிச்சிக்கலில் சிக்கித் தவிப்பது உண்மை தான். இதற்காக அரசு மற்றும் வங்கிகளை உதவி செய்யுமாறு கேட்டுள்ளோம் என்றார்.

இதுபற்றி இலங்கையில் இருந்து வெளியாகும் டெய்லி மிரர் என்ற பத்திரிகையில், தன்னிடம் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியம் கூட கொடுக்க முடியாத நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை உள்ளது. இந்தச் சிக்கலில் இருந்து கிரிக்கெட் சபையைக் காப்பாற்ற ரூ. 8 கோடி வரை கொடுக்க இலங்கை அரசு முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சி. செய்தித் தொடர்பாளர் இது குறித்து கூறுகையில், மைதானத்தில் போட்டிகள் நடத்தப்படும் எண்ணிக்கைக்கு ஏற்றவாறுதான் கட்டணம் வழங்கப்படும். மைதானம் கட்டுவதற்கு ஆகும் செலவுகள் குறித்தெல்லாம் ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றார்.

## ரொனால்டோவா, கரீம் பென்சமா சிறந்த ஆட்டக்காரர் யார்?

பிரேசில் கால்பந்து நட்சத்திர வீரரான ரொனால்டோவை விட பிரான்ஸ் வீரர் கரீம் பென்சமா சிறந்த ஆட்டக்காரர் என முன்னாள் ரியல் மாட்ரிட் கோல் கீப்பர் ஜெர்சி டுடெக் கூறினார்.

பிரேசிலுக்கும், ருமேனியாவுக்கும் இடையே புதன்கிழமை நட்பு ரீதியிலான ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் பிரேசில் 1-0 கோல் கணக்கில் வென்றது.

ரொனால்டோ, கால்பந்து போட்டியில் இருந்து விலகும் கடைசி ஆட்டமாக இந்த ஆட்டம் இருந்தது. அவரது கால ஆட்டத்தில் மிகச்சிறந்த கால்பந்து வீரர் என அவர் கருதப்படுகிறார். ஆனால், 3 முறை உலகக்கிண்ணப் போட்டியில் ஆடிய பென்சமா, ரொனால்டோவை விட தலைசிறந்தவர் என முன்னாள் கோல் கீப்பர் ஜெர்சி டுடெக் புகழாரம் சூட்டினார்.

மாட்ரிட் கிளப் பென்சமாவை ஒப்பந்தம் செய்த போது மிகச்சிறந்த வீரரை மாட்ரிட் அணி ஒப்பந்தம் செய்துள்ளது என சகவீரர்களிடம் கூறினேன் என ஜெர்சி டுடெக் கூறினார். கரீம் பென்சமாவிடம் அதி அற்புதமான ஆட்டத்திறன் அமைந்துள்ளது. அவரது கண்கள் கோல் அடிப்பதிலேயே வட்டமிடும் என்றும் ஜெர்சி டுடெக் கூறினார்.

கால்பந்து போட்டியிலிருந்து ஓய்வுப் பெறப் போவதாக முன்னாள் லீவர் பூல் கோல் கீப்பர் டுடெக் கூறினார். ஆனால் வருகிற சீசனில் அவர் சியாட்டில் சவுண்டர்ஸ் அணியில் சேருவார் என தகவல்கள் கூறுகின்றன.

பொதுவாக இவ்வாறான மதிப்பீடு தேவையற்றது. இது குழப்பத்தை ஏற்படுத்தும் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## சாய்னா, காஷயப் முன்னேற்றம்

(பாங்கொக்)

பாங்கொக்கில் நடைபெற்று வரும் தாய்லாந்து ஓபன் கிராண்ட்ப்ரீ பட்மின்ரன் போட்டியில் இந்தியாவின் சாய்னா, காஷயப் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சாய்னா 21-13, 15-21, 21-7 என்ற செட் கணக்கில் ஜப்பானின் மிடானி மினாட்சுவை வீழ்த்தியதன் காலிறுதிக்கு முன்னேறினார். இவர் வெள்ளிக்கிழமை நடைபெறும் காலிறுதியில் சீனாவின் லீயை சந்திக்கிறார்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் கா'யப் 21-16, 19-21, 21-12 என்ற செட் கணக்கில் மலேசியாவின் அப்துல் லத்தீப்பையும், சௌரப் வர்மா 21-19, 23-25, 21-14 என்ற செட் கணக்கில் மலேசியாவின் பெங் ஹாங்கையும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினர்.

காலிறுதி ஆட்டத்தில் கா்ஷயப், சீனாவின் ஷென் லாங்கையும், சௌரப், கொரியாவின் சுங்வானையும் சந்திக்கின்றனர்.

## மூன்றாவது போட்டியிலும் கெய்ல் அவுட்

இந்திய அணியுடனான இன்றைய மூன்றாவது போட்டியில் விளையாடும் அணியில் இடம்வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் கிறிஸ் கெய்லுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மேற்கிந்தியத்தீவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்தியாவுக்கு எதிரான அணியிலும் கெய்ல் இடம் பெறவில்லை. அவர் அணியில் இல்லாததால் 20 ஓவர் போட்டியிலும் அடுத்து நடந்த 2 ஒருநாள் போட்டிகளிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோற்றது. எனவே 3ஆவது போட்டியில் கிறிஸ் கெய்ல் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 3 ஆவது போட்டியிலும் கெய்ல் இடம் பெறவில்லை.

3ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் கெய்ல் பெயர் இடம் பெறவில்லை. மேலும் அணியில் 2 மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பிராவோவுக்கு பதில் டான்சா ஹயாத்தும் ராம் பாலுக்கு பதில் கெமர் ரோச்சும் இடம் பெற்றுள்ளனர்.

அணி விவரம் வருமாறு:

டாரென் சமி (கப்டன்), கார்ட்டன் பாக், தேவேந்திர பிஷோ, டாரென் பிராவோ, கிர்க் எட்வர்ட்ஸ், டான்சா ஹயாத், ஆன்டனி மார்ட்டின், போலார்ட், கெமர் ரோச், ஆன்ட்ரே ருஸ்செல், சாமுவேல்ஸ், சர்வான், சிம்மன்ஸ்.

இதேவேளை, நல்ல ஆட்டத்திறனுடன் உள்ள எனக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படாதது ஏறமாற்றமான விடயம். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதை நான் வரவேற்கின்றேன். அதற்கான என் போன்ற வீரர்களை ஓரங்கட்ட நினைப்பது முட்டாள்தானமான செயல் என கிறிஸ் கெய்ல் ஊடகமொன்று கருத்துத் தெரிவித்தார்.



# சூடான் வர்த்தகரைக் கடத்தி கப்பம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைதானார்

(கொழும்பு)

சூடான் நாட்டைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரையும், அவரது மனைவியையும் கடத்தி கப்பம் பெற்றுக்கொள்ள முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரே இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

சூடான் நாட்டின் தம்பதியினரைக் கடத்திச் சென்று அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து 25 இலட்ச ரூபா கப்பம் கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்தச் சம்பவம் தொடர்பில் மருதானைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சூடான் வர்த்தகரிடம் 50,000 ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு விடுதலை செய்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக மருதானைப் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது, கடத்திய நபர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதனைக் கண்டு சூடான் நாட்டு வர்த்தகர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

குறித்த சூடான் நாட்டு வர்த்தகர் இலங்கைப் பெண் ஒருவரை மணம் முடித்து, இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை நடத்திச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊழியர் ஒருவர் கொலலப்பட்டமைக்கும், பொதுமக்கள் எதிர்கொள்ளும் அவலங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் ஐ.தே.க தலைவர் ரணில் தலைமையில் கொழும்பு - மருதானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் காணலாம்.

## டெங்கு நோயாளர்களுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகளை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதான வைத்தியசாலைகளுக்கும் 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு தீவிர சிகிச்சைப் பிரிவிலும் டெங்கு நோயாளருக்கு மட்டுமென 5 கட்டில்களை ஒதுக்கிவைக்குமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் டெங்கு நோயாளர்களைப் பராமரிக்கும் வைத்தியக் குழுவினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# போலியான தேசப்பற்று, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசு வெளிக்காட்டுவதாக ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

போலியான தேசப்பற்றையும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் அரசாங்கம் வெளிக்காட்டுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

காலியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

எனினும், உண்மையிலேயே ஏகாதிபத்திய வாதிகளிடம் மண்டியிட்டு, இந்தியாவிடம் மண்டியிட்டு அந்த நாடுகளுக்கு தேவையான வகையில் நாட்டின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் முன்னெடுக்கப்படுவதாக ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

இந்த அரசாங்கம் ஜனநாயகத்தைப் பாதுகாக்காது, ஏகாதிபத்திய கொள்கைகள் காரணமாக தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், அவசரகாலச் சட்டத்தை நீக்காமல், மனித உரிமைகளைப் பாதுகாக்காது ஜனநாயகத்திற்கு எதிராகச் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கூட்டுப் பிரகடனம் தொடர்பாகவும் இதன்போது ரில்வின் சில்வா கருத்தினைக் கூறினார்.

இவை அனைத்தும் இந்தியாவின் அழுத்தத்துடன் அல்லாது, நாட்டு மக்களின் தேவைக்கு ஏற்ப நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் கூறினார்.

## புனர்வாழ்வு முகாம்களில் 3,500 பேரே உள்ளனர்

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் இன்னமும் 3500 புலி முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெற்று வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரையில் 7350 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முகாமகளில் உள்ளவர்களுள் ஒரு குழுவினரை இம்மாத இறுதியில் சமூகத்துடன் ஒன்றிணைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்த வருட நிறைவுக்குள் அனைவரும் சமூகத்துடன் இணைக்கப்பட்டுவிடுவர் என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர்களுக்கான சுயதொழில் வசதிகள் அதற்கான கடன் உதவி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடை; சட்டசபைத் தீர்மானம் துரதிர்ஷ்டவசமானது

### தூதுவர் பிரசாத் காரியவசம் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் துரதிர்ஷ்டவசமானது என்று இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் நல்லெண்ணத்தைக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக கருத்துக்களை வெளியிடும் முன்னர், இலங்கைக்கு ஒருமுறை சென்று நிலைமைகளை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு, இலங்கை தொடர்பில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் அதாரமற்றவை. அதே போன்றே தமிழக சட்டசபைத் தீர்மானமும் அமைந்துள்ளதாக பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை கடற்படைக்குத் தொடர்ந்தும் உதவி வழங்கத் தயாராகவுள்ளோம்

## அமெரிக்க பசுபிக் பிராந்தியத் தளபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

**போருக்குப் பின்னரான சூழலில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை கடற்படைக்கு உதவிகளை வழங்கும் என்று அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியக் கட்டளைத் தளபதி அட்மிரல் றொபேட் எவ்.வில்லாட் உறுதியளித்துள்ளார்.**

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவை சிங்கப்பூரில் சந்தித்துப் பேசிய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

'சங்கிரிலா கருத்தரங்கு' என்ற பெயரில் சிங்கப்பூரில் நடத்தப் பட்ட ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்தபோதே, அமெரிக்க இலங்கை கடற்படைத் தளபதிகளுக்கு இடையிலான இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெறுவதற்கு அமெரிக்கா வழங்கிய உதவிகள் குறித்து தாம் எப்போதும் மதிப்புடன் நோக்குவதாக இலங்கைக் கடற்படைத் தளபதி இந்தச் சந்திப்பின் போது அமெரிக்கத் தளபதியிடம் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் போருக்குப் பிந்திய நிலைமைகள் தொடர்பாக அமெரிக்கத் தளபதி விபரங்களைக் கேட்டறிந்துள்ளார்.

குறிப்பாக இலங்கை கடற்படை தொடர்பாகவும், புலிகளின் ஆயுதக் கப்பல்களை மூழ்கடிக்கும் நடவடிக்கையில் பங்கேற்ற- அமெரிக்கா வழங்கிய 'சமுத்திர' என்ற போர்க்கப்பலின் செயற்பாடு பற்றியும் அவர் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

அமைதி திரும்பியுள்ள நிலையில், அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வரமுடிந்துள்ளதாகவும், எனவே இலங்கைக்கான பயணங்களைச் அவை மேற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கைக் கடற்படைத் தளபதி இந்தச் சந்திப்பின்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

27 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள், படை அதிகாரிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை, இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளிக்க பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார் என்றும், ஆனால், கட்டுநாயக்க தாக்குதல் சம்பவத்தை அடுத்து அவர் இதில் கலந்து கொள்ளவில்லை என்றும் அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

## மானிய ஆணைக்குழுவின் எண்ணிக்கையை பதினைந்தாக அதிகரிப்பதற்கு அனுமதி

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவின் ஆலோசனையின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 07 இலிருந்து 15 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஆணைக்குழுவின் செயற்பாடை அதிகரிப்பதற்காக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க திருத்தச் சட்டம் ஆகியவற்றில் அவசர சட்டமூலமாகக் கருதி திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியின் கீழ் வவுனியாவில் 2ஆம் கட்ட வீடமைப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு நிர்மாணப் பணிகளின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் விரைவில் ஆரமபிக்கப்படவுள்ளதாக வுவனியா மாவட்ட அரசங்க அதிபர் பி.எஸ.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சுமார் மூவாயிரம் வீடுகள் நிர்மாணத் திட்டத்தின் முதற் கட்டமாக 518 வீடுகளின் பணிகள் ஏற்கனவே பூர்தியடைந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் கூறினார்.

இதன் இரண்டாம் கட்டமாக சுமார் ஆயிரத்து 200 வீடுகளும், மிகுதி எண்ணிக்கையான வீடுகள் மூன்றாம்கட்டமாகவும் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இரண்டாம் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளுக்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான முதல் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன் மூலம் பயனாளி ஒருவருக்காக சுமார் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிடப்படுவதாக வவுனியா மாவடட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# காணாமற்போன முதியவர் பேசாலையில் கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில், காணாமல்போன முதியவர் ஒருவர் பேசாலைக் கிராமத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த 83 வயதான முதியவரே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக மேற்படி முதியவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில், முதியவரின் உறவினர்கள் அவரைப் பார்க்க வநத போது அவர் வைத்தியசாலையில் இல்லாததைக் கண்டு குழப்பமடைந்தனர். முதியவரைத் தேடும் பணியில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்கள், மன்னார் பேசாலைக் கிராமத்தில் முதியவர் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

பின்னர் முதியவர் வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தங்கம் பொருத்திய இடுப்புப்பட்டிகள்; 6 பேர் வசமாக மாட்டிக்கொண்டனர்

(கொழும்பு)

இந்தியக் கடவுச் சீட்டுடன் இலங்கையிலிருந்து தங்கத்தைக் கடத்திச் சென்ற ஆறுபேர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களிடமிருந்து இந்திய நாணயப் பெறுமதியில் ஒன்பது தசம் நான்கு இலட்சம் ரூபா பெறும்தியுடைய 415 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக சென்னை விமான நிலைய சுங்கப் பிரிவினரை மேற்கோற்காட்டி "த இந்து" ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில சிலரிடம் கையளிப்பதற்காக கொழும்பில் வைத்து, இனந்தெரியாத சிலரால் தங்கம் பொருததப்பட்ட இடுப்புப் பட்டிகள் தங்களுக்கு வழங்கப்பட்டதாக கைதானவர்கள் கூறியுள்ளனர்.

இந்த உதவிக்கு உபகாரமாக இந்திய நாணயப் பெறுமதியில் சுமார் ஆயிரம் ரூபாவைத் தங்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சென்னை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.



கிளிநொச்சி - கோணாவில் பரி.தோமா முன்பள்ளி மாணவர்கள் நீண்ட காலமாக இருக்கைகள் இன்றித் தமது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுத்து வந்துள்ளமை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தமையை அடுத்து, அவரினால் ஒரு தொகை பிளாஸ்ரிக் கதிரைகள் முன்பள்ளிக்கு கையளிக்கப்பட்டது. (29)

# புனித அந்தோனியார் திருவிழாவிற்கு மாநகர சபையால் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவினை முன்னிட்டு யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பமான இந்தச் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடத்தப்படும்.

பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து குருநகர் ஊடான பாதைகள் வழியாக இந்தப் பேருந்துகள் நேர மாற்றத்துடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் திருப்பலிப் பூசைகள் முடிந்த பின்பும் இரவு 8.30 மணிவரை பயணிகளை ஏற்றி இறக்குவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பாசையூர் பங்குத் தந்தை அருட்திரு. றோய் பேடினன் அடிகளார் தெரிவித்துள்ளார். (21)

# சிறுவர் காப்பகங்களை பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)


சிறுவர் காப்பகங்கள் மற்றும் சிறுவர் கல்வி நிலையங்களைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் காப்பகங்கள், பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சிறுவர் கல்வி நிலையங்கள் என்பனவற்றை பதிவுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை ஏற்கனவே நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை கொழும்பு மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளது என அவர மேலும் கூறியுள்ளார்.

# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தது



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட இலஞ்ச மற்றும் ஊழல் மோசடி ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி,

ஆணைக்குழு செயல் இழந்திருந்த காலப்பகுதியில் விசாரணை செய்யப்படாமல் இருந்த 1700 முறைப்பாடுகளில் 40 முறைபபாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர்நீதிமன்றத்தின் நீதியரசருமான ஜகத்பாலபட்டபெந்தி தெரிவித்தார்.

பல உயர் அரசாங்க அதிகாரிகள் மீதும் இத்தகைய ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் வந்திருப்பதனால், அவற்றின் விசாரணையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்ட சில தினங்களில் தமது புலன் விசாரணை அதிகாரிகள் இலஞ்ச மற்றும் ஊழல் மோசடிகள் பற்றிய 12 திடீர் சோதனைகளை மேற்கொண்டதாகவும், அதில் 8 சோதனைகள் வெற்றிகரமாக அமைந்திருப்பதாகவும், விரைவில் இவற்றில் சம்பந்தப்பட்ட குற்றமிழைத்தவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவு ஈடுபட்டுள்ளது.

இதன்படி அக்கராயன் மற்றும் உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக மண் அகழ்ந்து சென்ற ஐந்து உழவு இயந்திரங்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

பின்னர் இந்த ஐந்து உழவு இயந்திரங்களும் மண் ஏற்றப்பட்ட நிலையில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. இதேவேளை சட்டவிரோதமாக மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வாகனங்களை கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படும் வழக்கையடுத்து அங்கே நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பால் உற்பத்தியை அதிகரிக்க 2 இலட்சம் பசுக்கள் கொள்வனவு

(கொழும்பு)

நாட்டில் பசும் பால் உற்பத்தியை 450 மில்லியன் லீற்றரால் அதிகரிப்பதற்கு அதற்காக இரண்டு இலட்சம் கறவைப் பசுக்களை தேசிய பாலுற்பத்தித் துறையுடன் புதிதாக இணைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது சந்தையில் நாளொன்றுக்கு 250 மில்லியன் மில்லிமீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுவதுடன், அதனை 700 மில்லியன் மில்லிலீற்றர் வரையில் அதிகரிப்பதற்காகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக கால்நடைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் எச்.ஆர். மித்திரபால தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக்காக வருடாந்தம் செலவாகும் சுமார் 3000 கோடி ரூபாவை குறைத்துக்கொள்ள இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கறவைப் பசுக்களை கொள்வனவு செய்வதற்காக சுமார் 4 கோடி ரூபாவை சலுகைக் கடன் அடிப்படையில் பாற்பண்ணையாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

# பேருந்து பயணக் கட்டண சீர்திருத்தம் எதிர்வரும் 14 இல் இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

பேருந்து பயணக் கட்டண சீர்திருத்தம் தொடர்பாக எதிர்வரும் 14 ஆம் திகதி இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பேருந்து சங்கங்கள் மற்றும் தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சு ஆகிய இரண்டு தரப்புக்குமிடையில் இதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

அதில் குறைந்த அளவிலான பேருந்துக் கட்டணத்தை 10 ரூபாவாக அதிகரிக்குமாறு தாம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்ததாக அகில இலங்கை பேருந்து நிறுவனங்களின் சம்மேளன பொதுச் செயலாளர் அஞ்சன பிரயஞ்சித் தெரிவித்தார்.

அதேநேரம் பேருந்துக் கட்டண தேசிய கொள்கை குறித்த பரிந்துரை உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என்ற உத்தரவாதம் ஒன்றை தாம் கோரியதாக இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன குறிப்பிட்டார்.

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த பௌத்த சமயத்தைக் கற்பிக்கும் திட்டம்

(கொழும்பு)

தமிழ் மாணவர்களுக்கு பௌத்த சமயத்தைக் கற்பிக்கும் திட்டமொன்றினை அமுல்படுத்தவுள்ளதாக அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஊடக சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே தமிழ் மாணவர்களுக்கு பௌத்த சமயத்தைப் போதிக்கும் நடைமுறையை அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பௌத்த சமயத்தைக் கற்பிப்பதன் மூலம் தமிழர்களை பௌத்த மதத்திற்கு மாற்றுவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழர்கள் சிங்கள மொழியையும், சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகின்றது என அவர் மேலும் கூறியுள்ளார்.

# மண்ணின் மாண்பை உயர்த்திய மாதவச் செல்விக்கு பெருவிழா



பொருத்தமான அறிவினையும் தேர்ச்சியையும் கொண்டுள்ள உற்பத்தியாண்மை மிக்க தொழிற்படையினை உருவாக்குவதில் கல்வி முறை முக்கியமான பங்கை வகிக்கின்றது. எனவே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறன்மிக்கதாகவும் இடம்பெற வேண்டும் என்ற எணணப்பாங்கு இன்று பலரிடம் வேரூன்றியுள்ளது.

உலக வங்கியினால் தயாரிக்கப்பட்ட அறிவுப் பொருளாதாரச் சுட்டெண்ணின்படி இலங்கை 140 நாடுகளிடையே 82 ஆவது இடத்தில் இருப்பதாக அண்மையில் வெளியிடப்பட்ட மத்திய வங்கி ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிவுப் பொருளாதாரத்தைக் கிராமமட்டத்திற்குக் கொண்டு செல்லும் எளிய அலகு பாடசாலை ஆகும். ஆனால் நமது பிரதேசக் கிராமப்புறப் பாடசாலைகள் வளங்களைச் சமமாகப் பெற்றுக்கொள்வதிலும் தரமான கல்வியை வழங்குவதிலும் சவால்களை எதிர்கொள்கின்றன. இதனால் கல்விக்காக நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கிய நகர்வு இயல்பாக இடம்பெறுகின்றது. இது குடும்பம் சார்ந்த நகர்ப்புற இடப்பெயர்வுக்கும் வழிகோலிவிடுகின்றது.

இப்பின்புலத்தில், சாவகச்சேரியின் பிரதேசப் பாடசாலைகளில் கற்பதன் மூலம் உலகையே திரும்பிப்பார்க்க வைக்க முடியும் என 1970 களில் சாதித்துக் காட்டினார் ஒரு மாணவி. அவரே இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்.

26.06.1959 இல் சாவகச்சேரியில் எஸ்.ஏ.அரசரட்ணம்-யோகவதி தம்பதியரின் ஏக புதல்வியாகப் பிறந்த வசந்தி சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தில் (இன்றைய மகளிர் கல்லூரி) தனது இளமைக் கல்வியைக் கற்றார்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தை அவரது பிறந்த மண்ணில் பாராட்டிக் கௌரவிக்கும் விழா நாளை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சிக் கலை மன்றக் கலாமண்டபத்தில் இடம்பெறுகின்றது.**

உயர்தரக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பெற்ற போது விலங்கியல் பாட ஆசான் சிவலோகநாதனின் கற்பித்தலால் கவரப்பட்டு எதிர்வரும் காலத்தில் உயிர் இரசாயனக் கற்கையை மேற்கொள்வதென முடிவு செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயிர் இரசாயனவியல் துறையில் முதற்பட்டத்திற்கான படிப்பை மேற்கொண்டு முதல் வகுப்பில் சித்தியெய்தினார்.

1984 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்ற வசந்தி தொடர்ந்து பல பதவிகளை வகித்து இன்று துணை வேந்தராக உயர்வு பெற்றார்.

அறிவுத் துறையில் சிறப்பான ஆளுமையை வெளிப்படுத்தி வரும் பேராசிரியர் வசந்தி அண்மையில் சாதனைப் பெண்களுக்காக வழங்கப்படுகின்ற 'சொன்ரா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கைச் சமூகத்துடன் தொடர்புடைய நீரிழிவு, போதைப் பொருள் பாவனை, போசனைக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளை முன்வைத்து பல ஆய்வுகளைச் செய்த காரணத்தால் 'சொன்ரா' கிளப் இலங்கையின் சாதனைப் பெண் என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களின் உயர்ச்சி இன்று வியக்க வைக்கும் அளவுக்கு முன்னிலை பெற்றுள்ளது. அறிவுப் பொருளாதாரத்தின் கூர்மையே இதற்கான காரணமாகும். யாழ்.மாநகர முதல்வர், அரச அதிபர், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் என்ற வரிசையில் வசந்தியும் இன்று முதன்மை பெற்றுள்ளார்.

இலங்கையின் பெண் துணைவேந்தர்கள் வரிசையில் பேராசிரியர் வசந்தி நான்காவது பெண் துணைவேந்தர் என்ற பெருமையைப் பெறுகிறார். கொழும்புப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சாவித்திரி, குணசேகர, திறந்த பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசாமி, கொழும்புப் பல்கலைக்கழகத் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ஷானிக்கா ஹிறிம்புரேகம ஆகியோரது வரிசையில் பேராசிரியர் வசந்தியும் சேர்ந்துள்ளார்.

மண்ணின் மாண்பை உயர்த்திய மாதவச் செல்விக்கு தென்மராட்சி மக்கள் ஒன்று திரண்டு பெருவிழா எடுக்கின்றனர். செல்வியின் சீரிய சிந்தனைகள் செயல் வடிவம் பெற்று யாழ்.பல்கலைக்கழகக் கல்வி சர்வதேச தரத்தில் அமைய நாமும் வாழ்த்துவோம்.

**கா.சிவஞானசுந்தரம், செயலாளர்,**
**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவிப்பு விழாக் குழு.**

# யாழில் இரண்டு வீதிகளைப் புனரமைக்க இரண்டாயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதான வீதிகளையும் மற்றும் ஏ-9 பிரதான வீதியையும் புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 'ஏ' தர வீதி 14, 'பி' தர வீதி 9 மற்றும் ஐந்து பாலங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்தப் புனரமைப்புப் பணியில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி புனரமைக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் பலாலி வீதி, காங்கேசன்துறை வீதிகளின் நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த இரண்டு வீதிகளின் நிர்மாணப் பணிகளுக்காக இந்த வருடம் அரசாங்கம் இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அத்துடன் ஐந்துகண் பாலமும், சோரன்பற்று, தாளையடிப் பாலமும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, கடந்த கால போர் நடவடிக்கை காரணமாக, புனரமைப்புச் செய்யப்படாதிருந்த ஏ-9 பிரதான வீதியின் புனர்நிர்மாணப் பணிகள் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் 2013 ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் நிறைவடையுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் வி.சுதாகரன் தெரிவித்தார்.

# கரித்தாஸ் – கியூடெக் அனுசரணையுடன் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள சேவை



(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ்-கியூடெக் நிறுவன அனுசரணையுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச மக்களுக்கான சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் மாவட்ட பதிவாளரினதும், உதவி அரசாங்க அதிபர் அலுவலர்களாலும் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ், விவாகப்பதிவு, தேசிய அடையாள அட்டை, காணி உறுதி ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் சேவை நடைபெற்றது.

இதில் கிராம சேவையாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று உரிய ஆதாரங்களுடன் சேவையினைப் பெற்றுக்கொண்டோரின் விபரங்கள் வருமாறு-

பூர்த்தி செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டைக்குரிய விண்ணப்பங்கள் 58, பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் 183, பெயர்மாற்ற விண்ணப்பம் 06, திருமணச் சான்றுகள் விண்ணப்பம் 30, மரணச்சான்றிதழ்கள் 06, காலங்கடந்த பிறப்புச் சான்றிதழ் பதிவுகள் 18, காலங்கடந்த இறப்புப் பதிவுகள் 02, திருமணச் சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டோர் 03, காணி தொடர்பான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டோர் 08. (21)

# விழிப்புணர்வுக் கண்காட்சி

(உடுவில்)

ஜெசாட் நிறுவனத்தின் அனுசரணையுடன் உடுவில் சுகாதாரப் பணிமனையினால் நடத்தப்படும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஜே.196 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கண்ணகி நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்காக நடத்தப்படும் இக்கண்காட்சி சிறுவர் துஷ்பிரயோகம், அவை ஏற்படும் சந்தர்ப்பங்கள், அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் தற்போது சமூகத்தில் ஏற்பட்டுள்ள தற்கொலைக்கான காரணங்கள் அதனைத் தடுப்பதற்கான வழிகள், சிறுவயதுத் திருமணம் அதனால் ஏற்படும் பிரச்சினைகள், தீர்வுகள் குறித்த விடயங்கள் தொடர்பாக சுகாதாரப் பணிமனையினால் தெளிவான விளக்கத்துடன் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இக்கண்காட்சி எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஜே.186 கிராம அலுவலர் பிரிவிலுள்ள உதயசூரி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக சுகாதாரப் பணிமனையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (55)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் ஒன்பது பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுககுக் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

613 ஆவது பிரிகேட்டின் 61 ஆவது பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தட்சனா மருதமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தெஹிவளையிலுள்ள தேவாலயம் இந்தக் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



**பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் சகல குடும்பங்களுக்குமான சூட்டடுப்பு கடந்த ஒரு வாரகாலமாக வழங்கப்படுகிறது.**

**பூநகரி கொட்டிய குறிஞ்சி கிராம சேவகர் பிரிவுக்கு அப்பகுதி கிராம சேவையாளர் அலுவலகத்தினால் சூட்டடுப்பு வழங்கப்படுவதனையும், அருகில் வழங்கப்படவுள்ள சூட்டடுப்புகளையும் காணாலம். (112)**

# மிதக்கும் ஐஸ்கிறீம் வாகனம்




உலகின் பிரசித்திபெற்ற கட்பூரி ப்ளேக் நிறுவனம் உலகின் முதன் முறையாக நீரிலும் நிலத்திலும் பயணிக்ககூடிய ஐஸ்கிறீம் வாகனம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த வாகனத்தின் பெயர் எஸ்.எம்.எஸ் - 99 என்பதாகும்.

கடந்தவாரம் பிரித்தானியாவில் உள்ள தேம்ஸ் நதியில் பரிசோதிக்கப்பட்டது. நீர்நிலைகளில் இவ்வருடம் முழுவதும் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளது. இனி நீர்நிலைகளில் மிதந்துக்கொண்டே ஐஸ்கிரீம் விற்கும் பணியை இந்த நிறுவனம் தொடங்கியுள்ளது.

# கூகுளின் புதிய புரட்சி!

சில்லறை வர்த்தகத்தில் கூகுள் பெரிய புரட்சி ஒன்றை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. கூகுள் வாலட் (Google Wallet) என்ற பெயரில் உங்கள் மொபைல் போனை மணி பர்ஸாக மாற்றுகிறது. இதன் மூலம் கடைகளில் பொருள் வாங்கிய பின் அங்குள்ள சாதனம் ஒன்றின் முன் உங்கள் மொபைல் போனை அசைத்தால் போதும். உங்கள் கணக்கில் உள்ள பணத்திலிருந்து சிட்டைக்குத் தேவையான பணம், கடைக்காரர் கணக்கிற்கு செல்லும். உங்கள் மொபைல் போனுக்கு அதற்கான சிட்டையும் கிடைக்கும். கடைக்காரர் இந்த விற்பனைக்கென ஏதேனும் தள்ளுபடி, பரிசுக் கூப்பன் தருவதாக இருந்தால் அதுவும் மொபைல் போனில் பதியப்படும்.

முதல் முறையாக அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் இது பரிசோதனை செய்யப்படுகிறது. தொடர்ந்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மற்ற நகரங்களுக்கு விரிவாக்கப்படவுள்ளது. இதற்கென கூகுள் நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள சர்வதேச ரீதியாக மூன்று இலட்சம் வர்த்தக நிறுவனங்கள் இதற்கு போட்டி போட்டுக் கொண்டு முன் வந்துள்ளன.



இந்தத் தொழில் நுட்பத்தினை Microsof, Visa, Sony, Nokia and AT&T ஆகிய நிறுவனங்கள் ஆதரவு செய்து வருகின்றன. இனி ரயில், பஸ் அல்லது விமானப் பயணங்களுக்கு இணையம் மூலம் டிக்கட் எடுத்து அதனை அச்செடுத்து மறந்துவிடாமல் எடுத்துச் செல்லும் வேலை எல்லாம் இருக்காது. மொபைல் மூலமாகவே இணையத்தில் பயணச் சிட்டை எடுத்து அதனைப் பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம்.

# திரைப்படங்கள் இலவசமாக...



இணையத்தில் வீடியோக்களை பகிர்ந்து கொள்ளும் தளமான யூடியுப் தற்போது Youtube Boxoffice புதிய சேவையை துவக்கி உள்ளது. இதன் மூலம் மாதம் ஒரு புதிய சூப்பர் ஹிட் முழுத் திரைப்படத்தையும் இலவசமாக காணலாம். இதற்கு Flash Player மென்பொருள் இணைத்து இருப்பது அவசியம். தற்போது பாலிவுட் திரைப்படங்கள் மட்டும் இதில் காண்பிக்கப்படுகின்றன. விரைவில் தென்னிந்திய திரைப்படங்களும் இதில் இடம் பெறலாம். இதற்கு நீங்கள் எந்த வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

உங்கள் கணினியில் இணைய இணைப்பு நல்ல நிலையில் இருந்தாலே போதுமானது. வேறு எதுவும் நீங்கள் செய்ய தேவையில்லை. இந்த சேவையின் மூலம் கிடைக்கும் விளம்பர வருவாயை கூகுள் நிறுவனம் படத் தயாரிப்பாளருக்கும் பிரித்து கொடுக்கிறது. இதனால் தயாரிப்பாளர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்தச் சேவைக்கு இன்டெல் நிறுவனம் முழு அனுசரணை வழங்குகின்றது. ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் இன்டெலின் விளம்பரம் 15 நொடிகள் ஒளிபரப்பாகும். இதை உங்களால் தடுக்க முடியாது. ஒரு முழு திரைப்படத்தையும் காணும் போது சுமார் 10-12 விளம்பரங்கள் ஒளிபரப்பாகும்.

ஒரே பிரசவத்தில் இரண்டைக் குழந்தைகள் பிறந்தால் அதனால் ஏற்படும் ஆனந்தத்திற்கு அளவே இருக்காது. ஆனால் ஆறு குழந்தைகள் பிறந்தால் ஆனந்தம் மட்டுமல்ல அதிசயமும் கூட.

இவ்வாறு ஒரே பிரசவத்தில் ஆறு பெண் குழந்தைகள் பிறந்த அதிசயம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது. இங்கு படத்தில் காணப்படுபவர்கள்தான் அந்த அதிசயப் பிறவிகள்.

# அபூர்வ சகோதரிகள்



இன்று வரை உலகில் ஒரே பிரசவத்தில் பிறந்த ஆறு பெண்கள் என்ற சாதனைக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இருக்கின்றார். இப்போது இவர்களுக்கு வயது 27. இவர்கள் மத்தியில் இன்றும் பிறக்கும் போது இருந்த அதே ஒற்றுமை காணப்படுகின்றது.

வாழ்க்கையில் இவர்களுக்கு இதுவரை ஏற்பட்ட சிறு சிறு தடைகளையெல்லாம் அந்த ஒற்றுமையின் பலத்தோடு வெற்றி கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

இவர்களின் வாழ்க்கையின் முக்கியமான ஒவ்வொரு கட்டத்தையும் பெற்றோர் படம் பிடித்து வைத்துள்ளனர்.


இன்றும் இவர்கள் இந்த சிறு வயதுப் பருவப் படத்தைப் பார்த்து மகிழ்கின்றனர். ஆனால் இப்போது இவர்களில் இருவர் தொழில் வாய்ப்பின் நிமித்தம் வேறு இடங்களுக்குப் பிரிந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை இவர்கள் ஆறு பேரும் வெலாஸே பகுதியில் பெற்றோர் கிரஹம் மற்றும் ஜெனட் ஆகியோருடன் ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர். உலகில் ஒரே சூலில் ஆறும் பெண் குழந்தைகளாகப் பிறந்து இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் அபூர்வ சகோதரிகள் இவர்கள்தான்.

# அகச்சிவப்பு கதிரில் மின்சாரம்

சூரியனில் இருந்து வெளிப்படும் அகச்சிவப்புக் கதிர்களில் இருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கான புதுவழியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுதொடர்பான ஆய்வை அமெரிக்கா ரைஸ் பல் கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

பூமிக்கு வரும் சூரிய சக்தியில் மூன்றில் ஒரு பங்கு, அகச்சிவப்புக் கதிர்களாகும். ஆனால், இன்று பெரும்பாலான சூரியசக்தித் தகடுகளில் பயன்படுத்தப்படும் பொருளான சிலிக்கானால் அகச்சிவப்புக் கதிர்களின் சக்தியை ஈர்க்க முடிவதில்லை. அகச்சிவப்புக் கதிர்கள் போன்ற குறிப்பிட்ட அலைநீளத்துக்குக் குறைவாக உள்ள வெளிச்சக் கதிர்கள், மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படாமல் சாதாரண சூரியசக்தித் தகடுகளைக் கடந்து சென்றுவிடுகின்றன. அந்த நிலையைத் தங்கள் கண்டு பிடிப்பு மாற்றுகிறது என்கிறாரகள் இந்த ஆய்வாளர்கள்.



தங்களின் கண்டுபடிப்பைக் கொண்டு, அதிதிறன் வாய்ந்த சூரியசக்தித் தகடுகளை பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும், அவற்றின் மூலமாக அதிக அளவில் சூரியசக்தி மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்று இந்த ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். இதுதொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து முனைப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தப் புதிய ஆய்வு பற்றி ஆய்வில் ஈடுபட்டிருக்கும் மின்னியல் மற்றும் கணினிப் பொறியியல் பேராசிரியர் நவோமி ஹாலாஸ் கருத்துத் தெரிவிக்கையில்: தற்போது சூரிய சக்தி மின்சாரம் தயாரிப்பதற்கான சிலிக்கான் பேனல்களில் அகச்சிவப்புக் கதிர்களைக் கண்டுபிடித்து ஈர்ப்பதற்கான வழி இல்லை. எனவே, நாங்கள் அதில் நானோ ஆன்டெனாக்களை செமி கண்டக்டருடன் இணைத்து அகச்சிவப்புக் கதிர்களில் இருந்து மின்சாரம் தயாரிக்க வகை செய்திருக்கிறோம். இதன்மூலம், அதிகத் திறன் வாய்ந்த சூரியசக்தித் தகடுகளை உருவாக்கலாம் என்றார் பேராசிரியர் நவோமி ஹாலாஸ்.

# இந்தியச் செய்திகள்

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் மோசடி தொடர்பாக தயாநிதிமாறன் பதவி விலக வேண்டும்

## - பாரதிய ஜனதா வலியுறுத்து



(பெங்களூர்)

2ஜி ஸ்பெக்ட்ரம் மோசடியில் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி, உடனடியாக பதவி விலக வேண்டும். ஊழலை ஒழிக்கவும், கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வரவும் வலியுறுத்தி, நாடு முழுவதும், வரும் 24, 25, 26 ஆகிய திகதிகளில் தொடர் போராட்டம் நடத்தப்படும் என பா.ஜ. பொதுச் செயலரும் எம்.பி.யுமான ரவி சங்கர்பிரசாத் கூறினார்.

2ஜி ஊழல் புகாரில், தி.மு.க. தலைவர் கருணாநிதி மகள் கனிமொழி, முன்னாள் மத்திய அமைச்சர் ராசா உட்பட பலர், தற்போது திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இப்படி ஊழல் பெருத்த கூட்டணியாக காங்கிரஸ் திகழ்கிறது.

தற்போதைய மத்திய அரசு, மாலுமி இல்லாத கப்பல் போன்று, ஊழலில் திளைத்து விளங்குகிறது. ஏர்செல் கம்பெனியை சிவ சங்கரனிடமிருந்து மலேசிய கம்பெனிக்கு மாற்றி கொடுத்தார் மத்திய அமைச்சர் தயாநிதி. அதற்கு கை மாறாக, சன் நிறுவனத்தில் மலேசிய கம்பெனி முதலீடு செய்தது. இதற்கு பொறுப்பேற்று, அமைச்சர் தயாநிதி உடனடியாக பதவி விலகவேண்டும். அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிணையில் விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்றில் கனிமொழி மனு



(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழி பிணைகோரி உச்சநீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்தார்.

கனிமொழியும், கலைஞர் டிவி நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் 2 ஜி வழக்கில் கைது செய்யப்பட்டு மே 20ஆம் திகதி முதல் திகார் சிறையில் உள்ளனர்.

இந்த வழக்கில் சிபிஐ தாக்கல் செய்த 2ஆவது குற்றப்பத்திரிகையில் இருவரின் பெயர்களும் இடம்பெற்றிருந்ததைத் தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் தாக்கல் செய்திருந்த பிணை மனுக்களை டில்லி உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை நிராகரித்தது. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் உள்ளதாக நீதிமன்றம் தெரிவித்தது.

அவர்களைப் பிணையில் விடுவித்தால் சாட்சிகளைக் கலைக்க வாய்ப்பு உள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பிணையில் விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்றத்தை கனிமொழி அணுகியுள்ளார்.

# பத்துப் பொலிஸார் பலி

(சத்திஸ்கர்)

மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் பொலிஸ் வாகனம் சிக்கிச் சிதறியதால் பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

தாண்மொவாடா பகுதியிலுள்ள அடர்ந்த வனப்பகுதியில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் மீதான நடவடிக்கையை முடித்த பின்னர், பொலிஸ் நிலையத்திற்கு ஜீப்பில் பொலிஸார் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

# தயாநிதிமாறனிடம் விசாரணை; தயாராகி வருகின்றது சி.பி.ஐ.



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் பல முன்னாள் மத்திய தொலைதொடர்புத்துறை செயலாளர்களிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ.முடிவு செய்துள்ளது. அதே போல்முன்னாள் தொலைத் தொடர புத்துறை அமைச்சர் தயாநிதி மாறனிடமும் விசாரணை நடத்த சி.பி.ஜ. திட்டமிட்டுள்ளது.

தயாநிதிமாறன் மற்றும் முன்னாள் செயலாளர்களிடம் விசாரணை நடத்துவதன் மூலம் பல உண்மைகள் வெளிவரும் என்று சி.பி.ஜ. கருதுவால் விரைவில் அவர்களிடம் விசாரணை நடைபெறும் என்று தெரிகிறது. இதற்கிடையில் கடந்த 10 ஆண்டு காலமாக மொபைல் லைசென்சுகள் ஒதுக்கீடு பற்றி விசாரணை நடத்தி வரும் கூட்டுக்குழு, முன்பு ஆஜரான தணிக்கைத்துறை அதிகாரி சில தகவல்களை தெரிவித்துள்ளார். அதில் ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் முன்பெல்லாம் அமைச்சர்கள் குழுவுக்கே முழுப்பொறுப்பும் இருந்தது. ஆனால் அதை மாற்றி விலை நிர்ணயம் செய்வதில் தொலைத்தொடர்புத்துறை அமைச்சகத்திற்கே முழு அதிகாரம் உண்டு. என்று மாற்றியதில் தயாநிதி மாறனுக்கே முக்கிய பங்கு உண்டு. அவர்தான் இதில் கருவியாக இருந்திருக்கிறார் என்று தணிக்கைத்துறை அதிகாரி கூட்டுக்குழுவில் கூறியுள்ளார். இதன்மூலம் தயாநிதிமாறனின் முறைகேடுகள் அம்பலத்திற்கு வந்துள்ளது.

# ஊழல்வழக்கு வந்துவிடுமோ எனப்பயந்து கச்சதீவை தாரை வார்த்தார் கருணாநிதி

## - என்கிறார் விஜயகாந்த்



(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் தன்மீது ஊழல் வழக்கு வந்து விடுமோ எனப் பயந்து சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கூட கொண்டுவராமல் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்தவர் கருணாநிதி என்று சட்டமன்றத்தில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றச்சாட்டினார். சட்டசபையில் நேற்று முன்தினம் கச்சத்தீவை மீட்பதற்காக உயர்நீதிமன்றில் முதல்அமைச்சர் ஜெயலலிதாவால் தொடரப்பட்ட வழக்கில் தமிழக அரசின் வருவாய் துறையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தின்மீது விவாதம் நடந்தது. அதில் கலந்து கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் பேசியதாவது: முதல் அமைச்சர் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். நான் மதுரையில் பிறந்தவன். எனவே எனக்கு கச்சத்தீவை பற்றி தெரியும். கச்சத்தீவில் முன்பு பண்டமாற்று முறை இருந்தது. அப்போது அங்கு நான் போயிருக்கிறேன். முழுச் சுதந்திரமாக மீனவர்கள் அங்கு போய் வந்தனர். வலைகளை காய வைக்கவும், மீன்களைத்தரம் பிரிக்கவும், மீனவர்கள் அந்தத்தீவை பயன்படுத்தி வந்தனர். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான அந்தத் தீவு தாரைவார்க்கப்பட்டபோது யாருடைய கருத்தும் கேட்கப்படவில்லை. மக்கள் குறைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதுதான் ஜனநாயகம். ஆனால் கச்சத்தீவை கொடுக்கும் போது மக்களின் கருத்தை கேட்கவில்லை.

இந்திய -இலங்கை அரசின் ஒப்பந்தத்தில் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதன் மூலம் தமிழக மீனவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முதல்அமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே உயர் நீதிமன்றில் தொடர்ந்த வழக்கில் வருவாய் துறையையும் சேர்த்துள்ளதையும் வரவேற்று இந்தத் தீர்மானத்தை நான் மனதார ஆதரிக்கிறேன் என்றார்.

# இலங்கையுடனான இந்தியக் கொள்கை; மாற்றுவதற்கு தி.மு.க வற்புறுத்தவேண்டும்

## - கூறுகிறார் பாண்டியன்



(சென்னை)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையுடனான இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மத்திய அரசை திமுக வலியுறுத்த வேண்டும் என்று கூறுகையில்,

அவர் மேலும், இலங்கை அதிபர் ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் வரவேற்கிறோம். இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை என்பது ஓர் அடையாள நடவடிக்கைதான்.

ராஜபக்ஷ அரசின் போர்க்குற்றங்களை விசாரிக்கவும் இலங்கையுடனான இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவும், மத்திய காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க வலியுறுத்த வேண்டும்.

அவ்வாறு மத்திய அரசு கொள்கையை மாற்றிக்கொள்ளாதவிடத்து, மத்திய ஆட்சியிலிருந்து தி.மு.க. விலக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவில் ஹுசைனின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி

(புதுடில்லி)

சர்ச்சைக்குரிய பிரபல ஓவியர் எம்.எ.்ப் ஹுசைனின் உடலை இந்தியாவுக்குக் கொண்டுவந்து இறுதிச்சடங்குகளைச் செய்ய அவரது குடும்பத்தினருக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

95 வயதான எம்.எ.்ப் ஹுசைன் உடல் நலக்குறைவு காரணமாக லண்டனில் ராயல பிராம்ப்டன் மருத்துவமனையில் நேற்று



காலமானார்.

இந்துக் கடவுள்களின் உருவங்களை நிர்வாணமாக வரைந்ததையடுத்து வலது சாரி அமைப்புகளால் ஹுசைனின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதையடுத்து 2006ஆம் ஆண்டு அவர் இந்தியாவில் இருந்து வெளியேறினார். 2010 ஜனவரியில் அவருக்கு கத்தார் குடியுரிமை வழங்கப்பட்டது.

ஹுசைனின் மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்

# 70 ஆயிரம் குழந்தைகளுக்கு இந்தியாவில் எய்ட்ஸ்

(சென்னை)

இந்தியாவில் 70 ஆயிரம் குழந்தைகள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் பெற்றோர்களிடமிருந்தே குழந்தைகளுக்கு நோய் பரவுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

யுனிசெப் மற்றும் மாநில எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு அமைப்பும் நடத்திய கருத்தரங்கில் இவை தெரிவிக்கப்பட்டது.

# பர்வேஷ் முஷாரப்பின் சொத்துகள் முடக்கியது பாகிஸ்தான் நீதிமன்றம்

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இழுத்தடிக்கும் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரபபின் சொத்துக்களை முடக்க அந் நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலைக்கு அப்போதைய ஜனாதிபதி முஷாரப்பின் அரசியல் கவனக்குறைவே என குற்றம் சுமத்தப்பட்டது.

இது தொடர்பாக நீதிமன்றில் ஆஜராகி முஷாரப் பதிலளிக்க வேண்டும் என்று ராவல் பிண்டி சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் வசிக்கும் முஷாரப்பை, நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த அந்நாட்டுப் புலனாய்வு அமைப்பு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

மேலும் முஷாரப் அல்லது அவரது வழக்கறிஞர் யாராவது ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் இறுதிக் கெடு விதித்தது.



இதைப் பொருட்படுத்தாமல் ஆஜராகாததால், முஷாரப்பின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை முடக்க நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# கால்வாய்க்குள் வீழ்ந்தது பஸ் 12 பாடசாலைச் சிறுவர்கள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் சென்ற பஸ், கால்வாய்க்குள் விழுந்ததனால் 12 சிறுவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் பாகிஸ்தானின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் நடைபெற்றது.

வேகமாகச் சென்ற பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் கால்வாய்க்குள் விழுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களே உயிரிழந்தவர்களாவர். இதில் இரண்டு சிறுவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பேருந்தை ஓட்டிச் சென்ற சாரதி தலைமறைவாகியுள்ளார். பாகிஸ்தானில் வீதிகள் மோசமாகச் சேதமடைந்துள்ளதனால் இவ்வாறான விபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




# உலக வங்கியின் தலைவராக ஹிலாரி


(வாஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அடுத்த ஆண்டு தனது அமைச்சர் பதவிக்காலம் முடியவுள்ள நிலையில் உலக வங்கியின் தலைவராக வர வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா அரசு நிர்வாகத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக உள்ளார். இவர் ஜனாதிபதி ஒபாமாவை எதிர்த்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

எனினும் ஒபாமா இவரை வெளியுறவு அமைச்சராக நியமித்தார். இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் அடுத்தாண்டு முதல் தொடங்குகிறது.

இதில் தனது பதவிகாலத்தை முடிக்கவுள்ள ஹிலாரி கிளின்டன், கௌரவமிக்க உலகவங்கியின் அடுத்த தலைவராக அதிகளவு வாய்ப்புகள் இருப்பதாக ரீடர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



இதற்காக பூர்வாங்க ஆலோசனை நடந்து வருவதாக ஹிலாரியின் செயலாளர் பிலிப்ரையினஸ் தெரிவித்தார். தற்போது உலக வங்கியில் 187 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இவர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாக ஒப்புதல் பெறப்பட்டால் 2012 ஆம் ஆண்டு ஹிலாரி உலகவங்கியின் தலைவர் பதவியேற்பார் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகவங்கியின் தற்போதைய தலைவராக ராபர்ட் ஜிலோயிக் உள்ளார்

# கடாபி பதவி விலகுவதைத்தவிர வேறு வழியில்லை என்கிறது சி.ஐ.ஏ



(வாஷிங்டன்)

லிபியா ஜனாதிபதி கடாபிக்கு சர்வதேச நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், அவர் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. யின் தலைவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவை, 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி கடாபியை பதவி விலகக் கோரி, அதிருப்தியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்களை ஒடுக்க அரசுப் படைகள் விமானத் தாக்குதல் நடத்தியதில், நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர். இதையடுத்து, அதிருப்தியாளர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நேட்டோ படைகள், கடாபிக்கு எதிராக களமிறங்கின.

இந்நிலையில் அமெரிக்காவின் செனட் சபையில் சி.ஐ.ஏ. அமைப்பின் தலைவர் லியோன் பெனிட்டா உரையாற்றி போது கூறுகையில், லிபியாவில் ஜனாதிபதி மொமர் கடாபியின் ஆதரவுப் படைகள் வலுவிழநது வருகின்றன.

நேட்டோ படைகளின்கையே தற்போது ஓங்கி நிற்கிறது. மேலும் சர்வதேச அளவில் ஜனாதிபதி கடாபிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அவர் பதவி விலகுவதைத்தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு அவர் கூறினார். இதற்கிடையே கடாபி மீது சர்வதேச நீதிமன்றில் போர் குற்ற வழக்கு நடந்து வருகிறது. இதில் ஆஜராகி பேசிய வக்கீல் ஒருவர், லிபியாவில் எதிர்ப்புப் பிரிவைச் சேர்ந்த பெண்களைக் கூட்டாக பாலியல் வல்லுறவுக்குள்ளக்குமாறு தனது ஆதரவுப் படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், இதற்காக அவர் வயகரா போன்ற ஒரு வகை மருந்தினை உட்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் கூறினார்.

# எய்ட்ஸ் இல்லாத உலகத்தினை 2020 இற்குள் உருவாக்க வேண்டும்

## ஐ.நா. செயலர் அழைப்பு

ஐ.நா. 2020 ஆம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் இல்லாத உலகத்தினை உருவாக்க வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் பான்கீ-மூன் கூறினார். எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் குறித்து ஐ.நா.வின் சிறப்பு மாநாடு ஐ.நா. பொதுசபையின் தலைமையகமான நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில் கலந்துகொண்டு ஐ.நா. பொதுச்செயலாளர் பான்-கீ மூன் பேசியதாவது,

உலகம் முழுவதும் ஆட்கொண்டுள்ள கொடிய நோய் எய்ட்ஸை ஒழிப்பது குறித்து விவாதிக்க இந்தச் சிறப்பு மாநாடு நடக்கிறது. அதன்படி வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தொடர்புள்ள நோய்களை ஒழித்து எய்ட்ஸ் இல்லாத உலகினை படைப்பதை இலட்சியமாகக் கொண்டு செயற்பட வேண்டும். அதனை முழுமூச்சாக செயற்படுத்த உலக நாடுகளின் ஒத்துழைப்புத் தேவை என அவர் கூறினார்

# புலம்பெயர் மக்களும், புலிகள் நிதி திரட்டலும்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் காரணமாக நான் வழங்கிய பணத்தினூடாகப் போர்க்குரல் எழுப்புவதாகத் தீர்மானித்தேன். அதேவேளை, வன்னிப்போரில் புலிகள் மக்களை வெளியேற விடாமல் தடுத்து வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகத் தொடங்கின.

இதனால் 2008 ஆம் ஆண்டு எனக்குத் திருப்பித் தருவதாக வாக்களிக்கப்பட்ட பணத்தை நெதர்லாந்துப் பொறுப்பளரிடம் சென்று திருப்பித் தருமாறு கேட்டேன். அது குறித்து எந்தத் தீர்க்கமான முடிவையும் அவர்கள் கூறவில்லை. வன்னியில் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்ததால், நான் மேலதிகமாக எதுவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்போது கருதவில்லை.

2009 மே மாதம் புலிகள் அழிக்கப்பட்டனர். அப்போது மறுபடி இளவரசனைத் தொடர்புகொண்டு பணத்தைத் தருமாறு கேட்கிறேன். உடனே அவர் எனது வீட்டிற்கு வந்து என்னோடு பேசுகிறார். பணம் சேகரிக்க வந்த ஏனையோரையும் தொடர்புகொள்கிறேன். நான் பணம் எங்கே என்று கேட்ட போது, அவர் அதனைப் பெற்றுக்கொண்டவர்கள் திருப்பித் தரவில்லை என்கிறார்.

என்னைப் பொறுத்த வரை அவரிடம் பணம் இல்லை என்பதை நான் இப்போதும் நம்புகிறேன்..

நீண்ட விவாதங்களின் பின்னதாக நான் ஒன்றை முன்மொழிகிறேன்.

“நானும் இளவரசனும் ஒரு அறிக்கை தயாரித்து பொது மக்களுக்கு வெளியிடுவதாகவும், அந்த அறிக்கையில் நெதர்லாந்திலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட சிலர் திருப்பித் தராமல் ஏமாற்றி விட்டார்கள் என்ற உண்மையைக் கூறுவோம் என்றும் சொல்கிறேன்.

அவ்வாறான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டால் எனக்குப் பணம் அவசியமில்லை. மக்கள் உண்மையை உணர்ந்து கொள்வார்கள் என்றும் கூறுகிறேன்.

உடனடியாக எனது முன்மொழிவுகள் தொடர்பாக ஏதும் கூறாத அவர், சில காலங்களின் பின்னர் அப்படி ஒரு அறிக்கையை நாங்கள் வெளியிட முடியாது என்று என்னிடம் கூறுகிறார்.

அதற்குப் பதிலாக, 2010 இல் பணத்தைத் திருப்பித் தருவதற்கான வேலைகளைச் செய்வதாக கூறினார். அதற்குச் சம்மதம் தெரிவித்த நான், அவரையும் அவரது மனைவியையும் கையொப்பமிட்டு பணம் தருவதாக உறுதிப்பத்திரம் ஒன்றைத் தயாரித்துத் தருமாறு கேட்டேன். அதற்கும் அவர் மறுத்துவிட்டார்.

இவை எனக்குப் பணம் குறித்த பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்தது. உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதிலும், மக்கள் பணம் மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்பதிலும் நான் உறுதியாக இருந்தேன்.

2010 ஆரம்பத்தில் நான் நெதர்லாந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்கிறேன். வழக்கு முடிவு இரண்டு நாட்களுக்கு முன்னர் (30.05.2011) தான் எனக்குக் கிடத்தது. இளவரசன் எனக்குப் பணம் வழங்கவேண்டும் என்றே முடிவாகியிருக்கிறது. அவர் பணத்தைத் திருப்பித் தருவார், பணம்தான் பிரதானமானது என்பதற்கும் மேலாக மக்கள் பணம் மக்களுக்கே சேர வேண்டும் என்பது குறித்து நான் தொடுத்த போராட்டம் வெற்றியடைந்திருக்கிறது என்பதே முக்கியமானது.

என் போன்ற பலரின் முயற்சி இளவரசன் போன்ற இடை நிலை செயற்பாட்டாளர்களையும் தாண்டி இதன் சூத்திரதாரிகளான நெடியவன் போன்றோர் வரை சென்றடைந்திருக்கிறது.

இவை அனைத்திற்கும் அப்பால் “போராட்டம்” என்ற பெயரில் அபகரிக்கப்பட்ட மில்லியன் கணக்கான பணம் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இல்லையேல் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

மக்கள் பணத்தோடு தொடர்புடைய ஒவ்வொருவரும், அது எந்த வடிவத்தில் திரட்டப்பட்டதாயினும், அதனை மக்களுக்குக் கூற வேண்டிய காலம் இது. வெளிப்படைத் தன்மை குற்றவாளிகளைத் தண்டிப்பதோடு மட்டுமன்றி, போராட்டத்தையும் செழுமை செய்யும்.

*நன்றி: தமிழநியூஸ்வெப்.*

**முன்னாள் TRO பொறுப்பாளர் ஒருவரின் வாக்குமூலம்**

# புலம்பெயர் மக்களும், புலிகள் நிதி திரட்டலும்

வல்வெட்டித்துறைக்கு அருகாமையிலிருந்த கம்பர்மலை கிராமத்தின் இன்னொரு மனிதனாக வாழ்ந்து வந்தேன். கொழும்பை பட்டும்படாமலும் சந்தித்துவிட்டு ஜேர்மனிய விமான நிலையத்தில் வந்திறங்கிய அகதிகளுள் நானும் ஒருவனானேன்.

ஒரு முகம்தெரியாத அகதியின் உயர்தர அங்கீகாரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (TRO) பொறுப்பாளனாக உயர்வதோ என பின்னாளில் பெருமிதம் கொண்டிருக்கிறேன்.

இன்றோ அகதியினதும் போராளியினதும் அர்த்தம் தெரியாமல் நெதர்லாந்துத் தெருக்களில் அங்கும் இங்குமாக சோகங்களைச் சுமந்தபடி அலைந்து கொண்டிருக்கிறேன்.

ஜேர்மனியில் சில காலங்களை தேசத்தின் நினைவுகளோடு கடத்திவிட்டு, 1984 இல் எனது அடுத்த பயணத்தை நெதர்லாந்தை நோக்கி ஆரம்பிக்கின்றேன். அங்கே என்னை இன்னொருதடவை அகதியாக அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

புலிகள் இயக்கத்தில் விமர்சனம் கொண்டவனாக இருந்தாலும், அவர்கள் போராடுகிறார்கள் என்பதால் தொடர்ச்சியான ஆதரவை, சாதாரண தமிழ்மகன் என்ற அடிப்படையில் வழங்கி வந்தேன்.

குறிப்பாகப் புலிகளின் இராணுவ வெற்றிகள் உருவாக்கியிருந்த மாயைக்குள் புலம்பெயர்நாடுகளில் வாழும் அனைவருமே கட்டுண்டிருந்த 30 வருடக் காலப்பகுதியில் விமர்சனங்களை ஒருபுறம் மூட்டை கட்டிவைத்துவிட்டு, நானும் ஆதரவு வழங்க ஆரம்பிக்கிறேன். நானும் விமர்சனங்கள் இன்றிப் புலிகளின் ஆதரவாளனாகிறேன்.

1992 ஆம் ஆண்டிலிருந்து புலிகளுக்குத் தொடர்ச்சியான நிதிப்பங்களிப்பை வழங்க ஆரம்பிக்கிறேன். வங்கியிலிருந்து எனது உழைப்பின் ஒரு பகுதியை வருடா வருடம் வழங்கிவருகிறேன். பின்னைய நாட்களில், இதே நிதிப்பங்களிப்பு அதிகரித்த தொகையாக மாதாமாதம் வங்கியிலிருந்து வழங்கி வருகிறோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெதர்லாந்துக் கிளையில் 1992 ஆம் ஆண்டு சாதாரண அங்கத்தவராக இணைந்து கொள்கிறேன். 1995 ஆம் ஆண்டு அதன் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறேன்.

1995 இலிருந்து 2002 வரைக்குமான ஏழு வருடங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளராகச் செயற்பட்டேன். புனர்வாழ்வுக்கழகம் புலி சார்பு நிலையில் இய்ங்கி வந்தமை அனைவரும் அறிந்ததே. புலிகளும் புலிசார் அமைப்புக்களும் பணம் சேர்ப்பதையே பிரதான வேலையாகக் கொண்டிருந்தன. ஆக, எனது பணியும் தமிழர்களிடம் பணம் சேகரிப்பதும், அதனை ஒருங்குபடுத்துவதுமாகவே அமைந்திருந்தது.

புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளராக இருந்த போது மகேஸ்வரன், திலகர் போன்ற முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறேன். நான் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பொறுப்பாளராகச் செயற்பட்ட காலத்தில் புலேந்திரன் என்பவர் தான் பொருளாளராகச் செயற்பட்டார்.

சேர்க்கும் பணத்தை இலங்கைக்கு அனுப்பி வந்தார். பணம் புலிகளிடமே முதலில் சென்றடைந்தது.

இது குறித்து எனக்கும் இளவரசனுக்கும் இடையே முரண்பாடுகள் உருவாகின்றன. நாம் ஒரு சட்டரீதியான அமைப்பு. புலிகள் அவ்வாறில்லை என்பதால், சடடப்பிரச்சினைகள் உருவாகும் எனக கூறினேன். தவிர, சட்ட ரீதியாகப் பணத்தின் செலவினங்களைக் காட்டுவதற்கு எமக்கு எந்த வழிமுறையும் இருக்கவில்லை. இதற்குப் பொருளாளரிடமிருந்தோ அன்றி புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையிடமிருந்தோ குறிப்பான எந்தப் பதிலும் கிடைக்காமையினால், 1997 ஆம் ஆண்டு புனர்வாழ்வுக் கழகத்திலிருந்து நான் வெளியேறிக் கொள்கிறேன்.

அதன் பின்னர், இப்போது 136 மில்லியன் யூரோ பரிமாற்றக் கணக்கில் சர்வதேச பொலிசாரால் பிடிக்கப்பட்டிருக்கும் ராமச்சந்திரன் மற்றும் நோர்வேயிலிருந்து சர்வே ஆகியோர் என்னை வந்து சந்திக்கின்றனர்.

இவர்கள் காலப்போக்கில் புனர்வாழ்வுக் கழகத்தை ஒரு ஒழுங்கிற்குக் கொண்டு வருவோம் என்றும் மீண்டும் இணைந்து செயற்படுமாறும் கேட்கின்றனர். ராமச்சந்திரனை எனக்குத் தனிப்பட்ட வகையில் தெரியும் என்பதாலும், அவர்கள் வற்புறுத்தியதாலும் நான் மீண்டும் பொறுப்பாளராகச் செயலாற்ற ஒத்துக் கொள்கிறேன்.

ராமச்சந்திரன் புலிகளின் சட்ட ரீதியான அமைப்பான தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நெதர்லாந்து அமைப்பின் பொறுப்பாளராகச் செயற்பட்டவர். எனக்கு நெதர்லாந்து முழுவதும் பரவலான தொடர்புகள் இருந்ததால், நாம் தீவிரமான நிதி சேகரிப்பில் ஈடுபட்டோம். அதன் விளைவாக நெதர்லாந்துக் கிளை உற்சாகத்துடன் செயற்பட்டது.

என்னுடைய தொடர்புகளூடாக நிதி சேகரித்தாலும், எம்மத்தியிலிருந்த பல இளைஞர்கள் தீவிரமாக இயங்கி உற்சாகமாகத் தொழிற்பட்டனர். 2002 ஆம் ஆண்டு மிகவும் தீவிரமாகவும் நேர்மையோடும் செயற்பட்ட புலேந்திரன் என்பவரைப் பொறுப்பாக நியமிக்குமாறு நானே முன்மொழிகிறேன். எனது தொடர்புகள், நம்பிக்கைக்கு உரியவர்கள் அனைவரும் இப்போது பணம் கொடுக்க ஆரம்பித்திருந்ததால், புலேந்திரன் தலைமைவகிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்ற அடிப்படையில் நான் அதிலிருந்து விலகிக் கொள்கிறேன். புலேந்திரன் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

அதற்கு பின்னரும் நான் மாதம் தோறும் புலிகளிற்குப் பணம் கொடுப்பதோடு மட்டும் நிறுத்திவிடாமல், புலிகளுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கும் ஆதரவு நிலையிலிருந்து வேலை செய்தேன். இந்த ஆதரவு நிலை 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தங்கள் நிகழும் வரை தொடர்கிறது.

சுனாமிக் காலகட்டத்தில் மிகப் பெருந்தொகையான பணம் நெதர்லாந்தில் மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதும் சேகரிக்கப்படுகிறது. நெதர்லாந்தில் திரட்டப்பட்ட பணத்தோடு ஒப்புநோக்கும்போது மொத்தப் பணமும் மக்களுக்குச் சென்றடைந்திருந்தால், பாதிக்கப்பட்ட அனைவரும் குறைந்தது பத்து வருடங்களுக்கு அடிப்படை வசதிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கலாம்.

ஆனால், நடந்ததோ வேறு. முதலில் தொலைக்காட்சிகளில் மக்களிடம் பணம் கோரப்பட்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்கு இலக்கங்கள் தான் கொடுக்கப்பட்டன. அந்த வங்கிக்கணக்கிற்கே பணம் வழங்குமாறு மக்கள் கோரப்பட்டனர். பின்னதாக அவை மாற்றப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்ற பெயரில் புலிகள் அமைப்பின் வங்கி இலக்கம் கொடுக்கப்பட்டது. பணம் அதிகமாக வழங்கப்படுகிறது என்று தெரிந்ததும், வங்கி இலக்கம் மாற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களின் பெயரில் புலிகளுக்காக பணம் சேர்க்கப்பட்டது.

அவ்வேளையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பொறுப்பாக நான் இல்லை. புலேந்திரன் தான் பொறுப்பாக இருந்தார். அவர் கூட புலிகளுடன் தீவிரமாக முரண்படுகிறார். மக்களுக்காகத் திரட்டப்படும் பணம் மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்று புலிகளுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையுடனும் பேசுகிறார்.

குறிப்பாக அச்சந்தர்ப்பதில் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையில் இருந்தவரும் இப்போது சர்ச்சைக்குரியவருமான ரெஜியுடன் புலேந்திரன் முரண்பட்டுப் பேசிய போதும், தீர்க்கமான எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. இருப்பினும், அவர் தொடர்ந்தும் புனர்வாழ்வுக் கழகத்துடன் செயற்படுகிறார்.

புலம் பெயர் நாடுகளிலிருந்து செல்லும் பணம் தொடர்பாகப் புலிகளுடன் தெளிவான வரையறைகள் இல்லாமையினாலும் உறுதியான பதில் கிடைக்காமையினாலும் புலேந்திரன் சில காலங்களின் பின்னர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொள்கிறார்.

எனக்குத் தீவிரமான முரண்பாடு ஏற்படுகிறது. செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்கிறேன். ஆதரவு நிலைப்பாட்டையும் குறைத்துக் கொள்கிறேன்.

2005 ஆம் ஆண்டளவில் புலிகளின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்குப் பொறுப்பாகவிருந்த இளவரசன் எனது வீட்டிற்கு வருகிறார். சில மாதங்களின் முன்பதாக அவர் நெதர்லாந்து பாதுகாப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப் பட்டிருந்தார். இப்போது அவர் விடுதலை செய்யப் பட்டுள்ளார். அவரோடு இன்னும் நான்கு பேர் எனது வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அனைவருமே எனக்கு நன்கு தெரிந்தவர்கள். அது 2005 ஆம் ஆண்டின் மத்திய பகுதி. அவர்கள் நான் இனிமேல் வங்கியிலிருந்து பணம் அனுப்பத் தேவையில்லை. ஆனால் இறுதி நிதி ஒன்றை மக்களிடமிருந்து திரட்டுகிறோம். இனிமேல் மேலதிகமாகப் பணம் கோரமாட்டோம், அதற்கு உதவிபுரியுமாறு கோருகின்றனர். அவர்கள் நான்காயிரம் யூரோக்களை என்னிடம் கோரினர். என்னிடம் இதுவரை அவ்வளவு பணம் இருந்ததில்லை. போராட்டத்திற்கான பணம் என்பதால், வங்கிகளிடம் கடன் வாங்கி மிகுந்த சிரமத்தின் மத்தியில் பணத்தை வழங்குகிறேன்.

தவிர, அந்தப் பணம் குறித்த வட்டியுடன் 2008 ஆம் ஆண்டு திருப்பித் தரப்படும் என்று அப்போது கூறியதுடன், அதற்குரிய பற்றுச்சீட்டும் வழங்கியிருந்தார்கள். அவர்கள் திருப்பித் தருவது தொடர்பாகக் கூறியவை தெளிவற்றவையாக இருந்தன. நீங்கள் எப்படி பணத்தைத் திருப்பித் தரமுடியும் எனக் கேட்டபோது, சேகரிக்கப்படும் பணத்தை பரவலாக முதலீடு செய்து அந்த முதலீட்டில் கிடைக்கும் பணத்திலிருந்து திருப்பிக் கொடுப்பதான திட்டம் இருப்பதாகக் கூறினர்.

2007 ஆம் ஆண்டில் பெயர் குறிப்பிட விரும்பாத புலிகளின் பொறுப்பாளர் ஒருவரை விருந்து வைபவம் ஒன்றில் சந்திக்கிறேன். நெதர்லாந்தில் புலிகள் அமைப்பை உருவாக்குவதில் முதன்மையான பங்கு அவரதுதான். பிரபாகரன் உட்பட புலிகளின் தலைமையைப் பல தடவை அவர் சந்தித்திருக்கிறார். என்னோடு நம்பிக்கை கொண்ட அவர், சில தகவல்களைக் கூறுகிறார். "பிரபாகரன் உள்ளவரை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வோ அன்றி தமிழீழமோ கிடைக்கப்போவதில்லை" என்கிறார். அதற்கான இரண்டு முக்கிய காரணங்களை அவர் கூறுகிறார்.

இவ்வாறான சம்பவங்களை வெளிப்படையாகச் சொன்னால் தமிழ்ச் சமூகம் தங்களைத் துரோகிகளாக முத்திரையிட்டுவிடும் என பய உணர்வைக் கொணடிருந்ததால், இவர் போன்றோர் மௌனம் சாதித்துக் கொண்டார்கள் என்றே எண்ணுகிறேன்.

நான் மதிப்பு வைத்திருந்த புலிகள் இயக்கத்திலிருந்து இந்தத் தகவல் வெளியாவது எனக்கு மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது. இப்போது எண்ணிப் பார்க்கிறேன். கே.பி. போன்ற காட்டிக் கொடுப்பாளர்களை உருவாக்கியது இவ்வாறான விமர்சனமற்ற ஒத்துப் போகும் சிந்தனைகள்தான்.

இது தவிர, நெதர்லாந்தில் வசிக்கும் எனது நண்பரும் புலி ஆதரவாளருமான மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் புலிகளை வன்னியில் சென்று சந்தித்துவிட்டுத் திரும்புகிறார். நெதர்லாந்து திரும்பியதும் இவர் என்னைச் சந்திக்கிறார். புலிகளை வன்னியில் சென்று சந்தித்த அவர், வன்னி சென்றதும் மனித உரிமைகள் குறித்துப் பேசுவதற்கு கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றிற்கு அழைக்கப் பட்டார். அங்கு அவர் சென்று நீண்ட கூட்டம் ஒன்றை நடத்துகிறார். அங்கு "நீங்கள் அனைவரையும் கேள்வி கேட்க வேண்டும் உங்களது மனித உரிமைக்காக நீங்களே போராட வேண்டும்" எனத் தனது உரையில் மக்களை நோக்கிக் கூறியிருக்கிறார்.

அவர் வெளியே வந்ததும், புலிகள இயக்கத்தினர் இப்படியெல்லாம் இங்கு பேசவேண்டாம் என அறிவுறுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு பேசினால் மக்கள் எமக்கு எதிராகவும் திரும்பக் கூடும் என புலிகள் சொல்லியிருக்கிறார்கள். இங்கிருந்து சென்றவருக்கு ஏமாற்றம் மட்டுமே எஞ்சியது. இதற்கு எதிராக அவர் கேள்வியெழுப்ப முற்பட்டபோது, புலிகளின் பொறுப்பாளர்கள், குறித்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் அங்கிருந்தால் தமக்குப் பிரச்சினை ஏற்படும் எனவும், அவரைத் திருப்பி அனுப்பி விடுமாறும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இவ்வாறு ஏராளமான சம்பவங்களை அவர் எனக்குக் கூறினார். இவை அனைத்தும் புலிகளின் தலைமை உண்மையாகவே விடுதலைக்காகப் போராடவில்லை என்பதை உணர்த்தின.

(தொடர்ச்சி... 13ஆம் பக்கம்)

# காணாமல் போனவர் எலும்புக் கூடாக மீட்பு

(ஏறாவூர்)

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளவாய், மதுரங்காட்டுப் பகுதியில் வெள்ளம் காரணமாக காணாமல்போன நபர் ஒருவர் நேற்று எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக்கூடு ஏறாவூர், தளவாய் பகுதியைச் சேர்ந்த தியாகராசா சந்திரமோகன் (வயது - 29) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை அடுத்த வாரம்



(கொழும்பு)

இந்திய-இலங்கை நாடுகளுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி தூத்துக்குடியில் இருந்து முதலாவது கப்பல் 13 ஆம் திகதி புறப்பட்டு 14ஆம் திகதி இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் இந்தக்கப்பலில் முக்கியஸ்தர்களுடன் குறிப்பிட்ட சில பயணிகள் ஏற்றிவரப்படுவர்

இந்தநிலையில் குறித்த கப்பல் அதேவாரத்தில் மீண்டும் தூத்துக்குடி நோக்கிப் புறப்படவுள்ளது

இந்தகப்பலில் பயணிக்க 59 டொலர்கள் அறிவிடப்படவுள்ளன சுமார் 1000 பயணிகளை கொள்ளக்கூடிய இந்த கப்பல் 10 முதல் 12 மணித்தியாலங்களில் தமது பயண இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

# ஓய்வூதியத் திருத்தம் விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரசாங்க ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வூதிய உரித்துடையோர்களிடமிருந்து 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளின் அடிப்படையில் ஓய்வூதியத்தினை திருத்தியமைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்திற்கமைய ஓய்வூதியர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு இலகுவாக உரியவர்களுக்கு தனித்தனியாக அவர்களது சொந்த முகவரிகளுக்கே விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், உரித்துடைய அனைவரும் அவ் மாதிரி விண்ணப்பப் படிவத்தினை அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைய பூரணப்படுத்தி தாமதமின்றி கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (03)

# பிரபல கொள்ளையர் குழு கண்டி பொலிஸாரிடம் சிக்கியது

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு இடங்களில் சுமார் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான பொருட்களை கொள்ளையடித்ததாக சந்தேகிக்கப்படும் கொள்ளை குழுவொன்றை கண்டி மத்திய புலனாய்வு காவல் துறையினர் நேற்று முன்தினம் மாலை கைதுச் செய்துள்ளனர்.

4 அடங்கிய இந்த கொள்ளை குழுவினர் கடைகள் மற்றும் வீடுகள் என்பவற்றை உடைத்து கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதுச் செய்யப்பட்டவர்களிடம் இருந்து மூச்சக்கர வண்டிகள், மடிக் கணினிகள், தங்க ஆபரணங்கள், உந்துருளிகள் என சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை, போராதெனிய., மாவனல்ல, வறக்காபொல உட்பட நாட்டின் பல்வேறு இடங்களில் இந்த குழுவினர், கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுப்பட்டு வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.


## இந்திய மீனவர்கள்...

முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய உள்ளதாக வெளிவந்த செய்தி தொடர்பாக கேட்டபோதே யாழ்.மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தச் செய்தியில் எனது பெயர் பயன்படுத்தப்பட்டுள் ளதே தவிர அதற்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இதுபோன்ற செயல்களுக்கு சமாசம் அனுமதிக்கப்போவதுமில்லை. தொடர்ந்தும் நாம் பேச்சுக்கள் நடத்தி அதன் மூலம் நல்லதொரு முடிவைப் பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

கடந்த 1, 2ஆம் திகதிகளில் வருகை தந்த இந்தியப் படகுகளைவிடத் தற்போது வருகை தரும் படகுகள் குறைவாகவே உள்ளன. பேச்சுக்கள் மூலம் இதனை முற்றாகத் தடுக்க முடியும் என நம்புகிறோம் என்றார். (கா)

# துரிதமாகிறது டெங்குக் கட்டுப்பாடு காணிகளைத் துப்புரவாக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீடுகள் மற்றும் வெற்றுக் காணிகளில் உள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு பிரதேச சபையினர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் டெங்குநோயின் தாக்கம் அதிகரிக்க ஏதுவான பற்றைகளை காணி உரிமையாளர்கள் உடனடியாகத் துப்புரவு செய்ய வேண்டும். அப்படித் துப்புரவு செய்யப்படாத பற்றைக் காணிகளின் உரிமையாளர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும். முன்னர் வெட்டி அகற்றப்பட்ட பற்றைகள் தற்போது மீண்டும் பெருகி உள்ளது. எனவே அவற்றையும் வெட்டி அகற்றுமாறு பிரதேசசபையினர் கேட்டுள்ளனர்.(கா)

# பதிவு செய்யப்படாத தனியார் நிறுவனங்கள்

## சட்ட நடவடிக்கை துரிதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி இன்றி இயங்கி வருகின்ற நிறுவனங்களுக்கு எதிராக நல்லூர் பிரதேச சபை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

பிரதேச சபையினர் பல தடவை அறிவித்தல் விடுத்தும், அதனைப் பொருட்படுத்தாது புதிதாக ஆரம்பித்த நிறுவனங்கள் மற்றும் ஏற்கனவே ஆரம்பித்து தமது பதிவுகளை மேற்கொள்ளாத நிறுவனங்களுக்கு எதிராகவே எடுக்கப்படவுள்ளது.

அடுத்த கட்டமாக இப்பகுதியில் பதிவு செய்யாது இயங்கி வரும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பிரதேச சபை தயாராகி வருகிறது.

எனவே அனைத்து நிறுவனங்களும் பிரதேச சபையிடம் தமது பதிவினை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிரதேச சபையினா கேட்டுக்கொண்டுள்ளனர். (கா)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல முழுநேர, பகுதிநேர தனியார் மேலைத்தேய மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு சுகாதாரத் திணைக்களப பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே சகல முழுநேர, பகுதிநேர தனியார் மேலைத்தேச மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களும் இக்கலந்துரையாடலில் தவறாது பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


# வாழ்வாதார உதவித் திட்டம் நாவற்காடு கிராமத்தில் துரிதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்காடு கிராமத்தில் மீள்குடியேறிய பத்துக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியாக யாழ்.வணிகர் கழகத்தினர் கோழிக்கூடுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

சுமார் 2,5000 ரூபா பெறுமதியான இவ் வாழ்வாதார உதவியில் 30 கோழிக்குஞ்சுகளும் அவற்றுக்கான தீவனம் மற்றும் பாவனைப் பொருட்கள் என்பனவும், கோழிக்கூடும் அடங்குகின்றது.

நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வு நல்லூர் பிரதேச உதவிப் பிரதேச செயலர் எஸ்.சோதிநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், செயலாளர் ஆர். ஜனக்குமார், நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சுரேந்திரநாதன் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் யாழ். வணிகர் கழகத்தினரும் கலந்துகொண்டனர்.



யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் சம்பிரதாய பூர்வமாகப் பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவியை வழங்கியதைத் தொடர்த்தும் ஏனையவர்களுக்கும் வழங்கப்பட்டது.

யாழ்.வணிகர் கழகத்தின் இவ்வாறான வாழ்வாதார உதவி கள் தொடர்ந்து 15 பிரதேச செயலகங்களுக்கும் விரிஸ்தரிக்கப்பட்டு மொத்தமாக 150 குடும்பங்களுக்கு வணிகர் கழகத்தினால் வழங்கப்படவுள்ளது.


ஏற்கனவே கடந்த மாதம் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வாழ்வாதார உதவித்திட்டம் தொடர்ந்து சாவகச்சேரி, காரைநகர் பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு இன்று நல்லூர் பிரதேச செயலகத்திற் குட்பட்ட மீள்குடியமர்ந்து நாவலடிக் கிராமத்திற்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

## வன்னியில் இந்திய...

கொண்டுள்ளனர்.

தீவிரவாத முறியடிப்பு நிபுணர்களான றொகான் குணரட்ன, லெப்.கேணல் டேவிட் கில்குலேன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டுள்ளனர். வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா அங்குள்ள கள நிலவரங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், இக்குழுவினர் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் தடுப்பிலுள்ள முன்னாள் போராளிகளை சந்தித்துள்ளனர். போரின் இறுதிக்கட்ட நிலவரங்கள் குறித்து முன்னாள் போராளிகளிடம் கேட்டறிந்து கொள்வதில் வெளிநாட்டுப் படை அதிகாரிகள் ஆர்வம் காட்டியதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை இக்குழுவினர் மெனிக் பாம் இடைத் தங்கல் முகாம், கண்ணி வெடிகள் அகற்றப்படும் பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர்.



# அரச நிதி மீது நாடாளுமன்ற அதிகாரம் பறிபோகும் அபாயம் தோன்றியுள்ளது

## ஐ.தே.க. போர்க்கொடி தூக்குகிறது

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் சில கொடுக்கல் வாங்கல்களில் அரசாங்கம் நடந்துகொள்ளும் முறையை பார்க்கும்போது அரசாங்க நிதி மீதான நாடாளுமன்றத்தின் அதிகாரம் பறிக்கப்படும் சாத்தியமுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி எச்சரித்துள்ளது.

காலி முகத்திடலில் ஆடம்பர ஹோட்டல் கட்டுவதற்கென சாங்கிரிலா, கற்றிக் ஆகிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்ட காணி தொடர்பான கணக்குகளை வெளிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதென ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷா டி சில்வா பத்திரிகையாளர் சந்திப்பில் பேசும்போது தெரிவித்தார்.

இந்தக் காணி அறுதியாக விறகப்பட்டுவிட்டதாக கூறிய டாக்டர் டி சில்வா இந்த விற்பனை தொடரபான கணக்கை அரசாங்க கணக்கெதிலும் காணமுடியவில்லை என்றார். இந்தப் பணம் திறைசேரிக்கு அப்பால் வைக்கப்பட்டு செலவளிக்கப்படுகின்றதாவென அவர் கேள்வியெழுப்பினார்.



இந்த கொடுக்கல் வாங்கலுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை. இதன் மூலம் பெறப்பட்ட தொகை எவ்வளவு என்பதுவும் நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. இதன் மூலம் யாப்பின் 148ஆவது உறுப்புரை அரசாங்கத்தால் மீறப்பட்டுள்ளதென கூறிய அவர், இதுவொரு ஆபத்தான முன்னுதாரணம். அரசாங்க நிதி மீது நாடாளுமன்றத்தின் அதிகாரம் பறிக்கப்படுவதில் இது முடியக்கூடும் என்றார்.

# கெயார் கடன் திட்டம்

வலிகாமம் வடக்கின் மாவைகாட்டி கிராமத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான சிறுதொழில் முயற்சி கடனுதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கெயார் சர்வதேசத்தின் நிதியுதவியுடன் வழங்கி வைக்கப்பட்ட இக் கடனுதவித் திட்டத்தில் விவசாயம் மீன்பிடி வியாபாரம் ஆகிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஏழு இலட்சத்து எழுபதாயிரம் ரூபா கடன் தொகை 23 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

## களுத்துறையில் மூவர் அடித்துக்கெலை

(கொழும்பு)

களுத்துறை புலத்சிங்கள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரூட்டியெல விவநாய கிராமத்தில் பொல்லால் தாக்கப்பட்டு மூவர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலைச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருமண வீட்டு வைபவம் ஒன்றிக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இனந்தெரியாத நபர்களால் பொல்லால் தாக்கப்பட்டு இவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## போதைப் பொருள் கடத்தல் சூத்திரதாரிகள் பலர் கைது

(கொட்டடி)

இராமநாதபுரம், திருபாளைக் குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்ட 500 கிராம் ஹெரோயினும் 30 கிலோ கிராம் கஞ்சாவினையும் தமிழ்நாடு புலனாய்வுத் துறையினர் கைப்பற்றியுள்ளனர் என இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

கியூப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் வீடொன்றினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போதே குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது இக்கடத்துலுடன் சம்பந்தப்பட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை இந்தியாவில் இருந்து நேற்று 2.50 மணியளவில் இலங்கைக்கு வந்த விமானமொன்றில் சட்டவிரோத போதைப பொருட்கள் என கருதப்படும் சிலவற்றைக் கடத்தி வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயாக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த இளைஞன கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் கொழும்பு ஒருகொடவத்தையைச் சேர்ந்தவராவார். இவரிடமிருந்து பான் பராக் எனப்படும் பாக்கு வகையும் ஹனஸ் புகையிலைத் தயாரிப்பு பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## வன்னியில் கள்ள ...

அவர்களிடம் இருந்து அச்சு இயந்திரம் மற்றும் போலி நாணயத்தாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கிளிநெச்சி-பரந்தன் பகுதியில் பால் சேகரிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்து வந்த இருவரே கள்ள நோட்டு அச்சடித்து பயன்படுத்தி வந்துள்ளனர் புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் ஒரு 5000 ரூபா தாளும், முரசு மோட்டைப் பகுதியில் ஒரு 5000 ரூபா தாளும் பயன்படுத்தி இவர்கள் பொருட்கள் கொள்வனவு செய்துள்ளமையும் தெரியவநதுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிபதி தே.சிவ குமார் உத்தர விட்டுள்ளார்.

## மதவாச்சி - தலைமன்னார் ரயில் பாதை அமைப்பு

(கொழும்பு)

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான ரயில் பாதைகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக கடந்த காலத்தில் ரயில் பாதைகள் காணப்பட்ட இடங்களை இனங்கண்டு அப்பாதைகளை துப்பரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரயில் பாதை அமைப்பதற்கான தண்டவாளங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

## வலிகாமம்...

பளை கிழக்கு, தெல்லிப்பளை துர்க்காபுரம், கட்டுவன் மேற்கு, வயாவிளான் கிழக்குப் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களுக்கான தேவை தொடர்பான பகுப்பாய்வு நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளதுடன், 2011ஆம் ஆண்டு இளவாலை வட மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மக்களுக்கான தேவை தொடர்பான பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இந்த பகுப்பாய்வின்போது பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மக்களின் பிரச்சினைகள் அவர்களின் உடனடித் தேவைகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டுத் தீர்க்கப்படும் எனத் திட்டப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (22)

## நோர்வேயுடன்...

தூதுவராக அமைச்சர் ராஜித சேனாரத்தினவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

நேர்வேயின் சிரேஷ்ட அமைச்சரும், சமாதானப் பேச்சுக்கான முன்னாள் அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்மைச் சந்திக்கவிருக்கும் ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து விரிவாக விளக்கவுள்ளார். இதன் மூலம் நோர்வேயுடன் இரு தரப்பு இராஜதந்திர உறவுகளை மீண்டும் வலுப்படுத்திக்கொள்ள வதற்கு அரசு முயற்சி எடுக்கவிருக்கிறது.

ஒஸ்லோவில் தங்கியிருக்கும் சமயத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார். இப்பேச்சுக்களும் நோர்வேயின் ஏற்பாட்டிலேயே நடைபெறவிருப் பதாகத் தெரிய வருகிறது. இதனால், இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விதிக்க நினைக்கும் தடைகளை தடுத்து நிறுத்த அரசு முயற்சி எடுக்கவிருக்கிறது.

## கல்விப் பணிப்பாளருக்கு யாழ்.இந்துவில் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஓய்வுபெற்ற யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்திற்கு எதிர்வரும் புதன்கிழமை மணிவிழா நடத்த ஏற்பாடாகி உள்ளது.

காலை 8.30 மணிமுதல் யாழ். இந்து கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மணிவிழாக் குழுத்தலைவர் யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசரா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதின முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மௌலவி எம்.ஏச். அப்துல் அஸீஸ் ஆகியோர் ஆசியுரை வழங்க உள்ளனர். பாரம்பரிய கைத தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் இமெல்டா சுகுமார், வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி உள்ளிட்ட பல பிரமுகர்கள் வாழ்த்துரைகள் வழங்கவுள்ளனர். (கா)

## பரீட்சை ஒத்திவைப்பு

(அச்சுவேலி)

யாழ்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பயிலும் க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விசேட செயற்திட்டத்தின் கீழ் (11.06.2011) நடைபெறவிருந்த பௌதீகவியல் மதிப்பீட்டுப் பரீட்சை தவிர்க்க முடியாத சில காரணங்களினால் எதிர்வரும் 25.06.2011 சனிக் கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறுமென விஞ்ஞானப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை வழமை போன்று தத்தமது கோட்டக் கல்வி அலுவலகங்களில் (24.06.2011) பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இப் பரீட்சை தொடர்பான புள்ளிப் பகுப்பாய்வுகள் பரீட்சை முடிவடைந்த ஒரு வார காலத்திற்குள் கல்வி அபிவிருத்திப் பகுதியில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (03)


## அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிப் பூசை இடம்பெற்று திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளது. (104)

# யாழ்ப்பாண கோட்டை புனரமைப்புத் துரிதம்



(கொட்டடி)

யாழ்.கோட்டையைச் சுற்றியுள்ள அகழியின் புனர்நிர்மாணப் பணிகளில் தொல்லியல் நிபுணர்களின் ஆய்வு நடவடிக்கையும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. இந்த அகழி கடந்த நூற்றாண்டுகளின் பின்னர் துப்புரவு செய்யப்பட்டுவருகின்றன.

அகழியில் இருக்கும் தண்ணீர் மற்றும் சேறு என்பன மோட்டார் பம்பிகள் மூலம் கடலுக்குப் பாய்ச்சப்பட்டு வருகின்றன. இந்த புனர்நிர்மானப் பணியில் தொல்பொருட்களைக் கண்டுபிடித்து எடுப்பதில் அதிக சிரத்தையுடன் ஈடுபட்டுவருகின்றதைக் காணக் கூடியதாய் உள்ளது.


**கலைமதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள்**

**புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் கீழ்வரும் திகதிகளில் இடம்பெறும்.**

மரதன் ஓட்டம் (ஆண்) 12.06.2011 காலை 6 மணி
சைக்கிள் ஓட்டம் (பெண்) 12.06.2011 காலை 7 மணி
இடம் :- கலைமதி விளையாட்டுக்கழக முன்றல்

**ஆண், பெண்களுக்கான சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலுள்ள வீர, வீராங்கனைகள் பங்குபற்ற முடியும். இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் 12.06.2011 ஆம் திகதி 6 மணிக்கு முன்னர் போட்டியில் பங்குபற்று வதை உறுதிப்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு :- க.ஜெயக்குமார் (செயலாளர்)
தொ.பே.இல :- 0771841202, 0776848373, 0778680722

அனுசரனை :- செல்வம் நந்தகுமார்
புத்தூர் கிழக்கு கலைமதி

(C/535)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.